● கார்த்திகை - 2023

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

கார்த்திகை - 2023

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு
ஆக்கதாரரே பொறுப்பு

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : நெகிழன்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்.**

காற்றுவெளியின் காரத்திகை மாத (2023) இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது. இருபது வருடங்களுக்கு மேலாக வெளிவரும் காற்றுவெளிக்கு படைப்பாளர்கள் தருகின்ற அதீத ஊக்கங்களினால்தான் நமது நம்பிக்கைகள் சிதைவுறாமல் தொடர்ந்தும் வெளிக்கொணர்கிற ஆர்வம் காட்டாற்று வெள்ளம் போல இல்லாவிடினும் நதிபோல பயணிக்கவாவது முடிந்திருக்கிறது.

சிறப்பிதழ்களின் வரிசையில் அடுத்த இதழ் நமது ஈழத்து எழுத்தாளர் க.சொக்கன் (க.சொக்கலிங்கம்) அவர்களின் சிறப்பிதழாக வரவுள்ளது.

ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பவுள்ளோர் யூனிக்கோட் எழுத்துருவிலும்(லதா), 4 பக்கங்களுக்கு அதிகமாகாமலும் அனுப்புங்கள். தொடர்ந்து காரை எஸ்.சுந்தரம்பிள்ளை, அ.ந,கந்தசாமி, சிரித்திரன், அப்பச்சி மகாலிங்கம் போன்றோரின் சிறப்பிதழ்களையும் வெளியிடவுள்ளோம்.

காலம் ஒத்துழைக்குமானால் சிறப்பிதழ்களை அச்சிலும் கொண்டுவரும் எண்ணமுண்டு.

கார்த்திகை மாதம் மாவீரர்களுக்கானது.கார்த்திகை 27 மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவு கூரும் நாளும் ஆகும்.

உலகை அச்சுறுத்தும் நோய்த்தொற்று, யுத்தம், தொடர்ந்து கொண்டிருக்கும் இனமுரண்பாடு போன்ற பல காரணிகளால் பாதிக்கப்படும் மக்களுக்காக பிரார்த்தனைகளை நாம் ஒருங்கிணைந்து மேற்கொள்ளல்வேண்டும். ஆதிக்கப்போட்டிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களால் மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர். அவர்கள் நலமுடன் வாழ காற்றுவெளியும் பிரார்த்திக்கிறது.

நட்புடன் இணைந்து பயணிப்போம்.

நட்புடன்,

சோபா

# படைப்பாளர்கள்

## சிறுகதைகள்:

1. கமலினிகதிர்
2. நெளஷாத் கான் லி
3. மனோகரன்கிருஷ்ணன் (மலேசியா)
4. சுந்தரிமணியன், புதூர்
5. அ,முத்துவிஜயன்
6. சங்கர சுப்பிரமணியன்(மெல்பேர்ன்)
7. இலங்கையர்கோன்

## கவிதைகள்:


1. இளையவன் சிவா
2. ஸ்ரீவி.முத்துவேல்
3. சாயிராம். தஞ்சாவூர்
4. பா.சிவகுமார்
5. தங்கேஸ்
6. சா. கா. பாரதி ராஜா
7. கவிஜி
8. வில்லரசன்(இலங்கை)
9. ரகுநாத் வ
10. DR.ஜலீலா முஸம்மில்
11. வளவ துரையன்
12. சொ.கோட்டீஸ்வரன்
13. ந.மயூரரூபன்
14. துவாரகன்

## கட்டுரைகள்:

1. சிறீ சிறீஸ்கந்தராசா
2. DR.ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)

## மொழிபெயர்ப்புகள்:

1. ஐரிஷ் கவிஞர் : டொனால்_டெம்ப்ஸே
   (தமிழில் : ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா : நொய்டா)
2. பாலைவன லாந்தர்
   (தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு : அநாமிகா ரிஷி
   (லதா ராமகிருஷ்ணன்)



**இளையவன் சிவா**

நீங்கள் வீசும் குண்டுகளில்
அழியும் உயிர்களை
எப்போதாவது நினைத்துப் பாருங்கள்
உயிர்ப்பித்தலின் ரகசியத்தை
வெடிகள் உணருமா
அழியும் எல்லைகளுக்குள்
அழியாத கல்வியை
விதைக்கும் புத்தகத்தை
உங்களின் துப்பாக்கிகள்
உருவாக்க முடியுமா
வழியற்றவர்களின் வலியை
விமானங்களும் ஏவுகணைகளும்
அரவணைக்க முடியுமா
தேசங்களைக் கடந்து
சேதங்களை உருவாக்கி
பிடிக்கும் பரப்புகளில்
பல்லாண்டு வாழும் உங்களின் உடலுக்குள்
எட்டிப்பார்க்காதா மரணத்தின் நிழல்.
மனங்களில் பிரிவினை விதைத்து
மாண்புகளைச் சிதைக்கும்
போர்களுக்குள் புதையும்
அமைதியை சுடுகாடுகள் ஏந்திக்கொள்ள
நிலங்களில் எதை ஆளப்போகிறது
நிம்மதியற்ற பேராசை.

**ஸ்ரீவி.முத்துவேல், துபாய்**

# தன்முனைக்கவிதைகள்

அவளின் ஏக்க ஊற்றால்
நிரம்பி வழியும் மனக்கிணறு
வெளியேறும் நீராய்
உடலை நீங்கும் என்னுயிர்

❍

மழைக்கு ஏங்கி நிற்கும்
வயலின் வெடிப்புகள்
அவளைப் பிரிந்த
என் உதடுகளில்...



# தத்தளிக்கும் ஓடங்கள்

**கமலினிகதிர், சுவிற்சர்லாந்து**

அன்று வானம் மப்பும் மந்தாரமுமாக காட்சியளித்தது. பிரித்தானியாவுக்கே சொந்தமான குளிருடன் கூடிய காற்று மெல்லென வீசியது. சூரிய வெளிச்சம் சிறிதுமின்றி வானம் சாம்பல் பூத்து இருந்தது. பாடசாலை முடிந்து விரிந்த தாமரைப்பூப்போன்ற குழந்தைகள் ஆரவாரத்துடன் வெளியே ஓடி வந்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் ஆனந்தம் தாண்டவமாடியது.பள்ளி முடிந்து வீடு செல்லும் மகிழ்ச்சி. அம்மாவின் வருகைக்காக வாசலில் காத்திருந்த ஆர்த்திகா யாருடனும் பேசாமல் மகிழ்ச்சி சிறிதும் இன்றி நின்று கொண்டு இருந்தாள். சதா குறும்புப் பேச்சும். மகிழ்ச்சி ததும்பும் வதனமுமாக இருக்கும் ஆர்த்திகா சமீப நாட்களாய் வாடிய முகமும்.சோகம் ததும்பும் கண்களுமாய் பார்ப்பதற்கே சகிக்க முடியாமல் இருந்தாள். லூசியை ஏற்ற வந்த அவள் அம்மா ”ஆர் யூ ஓகே ஆர்த்திகா?ஆர் யூ வீலிங் பாட் டார்லிங்?அவள் வாட்டத்தைப்பார்த்து அன்பாக கேட்டாள்“ஐ ஆம் ஓகேஆன்ரி” செயற்கைப் புன்னகையுடன் பதில் அளித்தாள் அந்த எட்டு வயதுச்சிறுமி. பக்கத்தில் வந்து அணைத்த லூசியின் அம்மா முதுகை ஆதரவுடன் தடவிவிட்டு “சியரப் டார்லிங்” கூறியபடி லூசியை கையில் பிடித்தபடி விடைபெற்றாள். லூசியும் “பாய.; ஹாவ் எ குட் வினிங் ஆர்த்திகா“என்று கூற இயந்திரமாய் மெல்லெனத் தலையசைத்தாள் ஆர்த்தி.லண்டன் நகரின் பிரபலமான பிரைமரி பாடசாலையில் ஆர்த்திகா கல்வி கற்கின்றாள்.மகள் இன்னும் கொஞ்சம் வளருமட்டும் திரும்பவும் தான் வேலைக்கு

போவதற்காக ஆர்த்திகாவின் அம்மா காத்திருந்தாள். பத்துவயது வந்து விட்டால் பொறுப்பாக தன்னைத் தானே பார்த்துக் கொள்வாள் என்பது அவள் பெற்றோரின் கருத்து. ஆனால் ஆர்த்திகா தன் எட்டு வயதிலேயே நல்ல பொறுப்பான சுட்டிச்சிறுமி.தானும் மகிழ்வுடனிருந்து தன்னைச் சுற்றி இருப்பவர்களையும் இனிமையுடன் வைத்திருப்பாள்.இப்போது ஒரு வாரமாக மகிழ்ச்சியின்றி எதையோ பறிகொடுத்தவள் போல் காணப்பட்டாள்.தாய் ப்ரியம்வதா இதைக் கவனித்தாலும் அதைப் பெரிதுபடுத்திக் கேட்பதைத் தவிர்த்தாள்.சின்ன விடயங்களுக்கெல்லாம் முக்கியம் கொடுத்துக் கேடடால் சிறுவயதிலேயே தங்களை மட்டுமே நிலைநாட்டப் பழகி விடுவார்கள் என்ற மனோதத்துவத்தை உணர்ந்தவள் அவள்.ஆனாலும் வெகு உன்னிப்பாக அவளின் மாறுதல்களை அவதானித்தபடியிருந்தாள்.ஆர்த்திகாவின் அண்ணா சித்தார்த்தும்;.அக்கா கீர்த்திகாவும் செகண்டரி பாடசாலை செல்பவர்கள் இருவரும் ஒன்றாகச் சென்று ஒன்றாகவே வீடு திரும்புவார்கள்.இப்போது அவர்களைப்பற்றிய கவலை ப்ரியம்வதாவுக்கு அவ்வளவாக இல்லை. இருவருமே நன்றாகப் படிப்பவர்கள்.இப்போது பத்தாமாண்டு பரீட்சைக்கு தங்களை தயார்படுத்துவதில் மும்மரமாக இருந்தார்கள். இருவரும் இரட்டையர்களாக இருப்பது பல விடயங்களில் வசதியாக இருந்தது. ஆரம்பத்தில் வளர்க்கும் போது கொஞ்சம் சிரமம் இருந்தபோதும் தாயைக் கூப்பிட்டு வைத்திருந்ததில் சிரமம் அவ்வளவாகத் தெரியவில்லை.

ஆர்த்திகா இவ்வளவு நாளும் அக்கா.அண்ணா என்று அவர்களுடன் பேசிச்சிரித்து விளையாடி இருப்பாள். இப்போ அவர்கள் நிறைய நேரம் படிப்பில் செலவழிப்பதால் ஒரு தனிமையை உணர்வதைத் தாய் கவனித்து தான் கூடியநேரம் அவளுடன் செலவழிப்பாள்.என்றாலும் ஆர்த்திகாவிடம் ஒரு வெறுமையை உணர்ந்தாள்.''ஏன் ஆர்த்திமா அண்ணா. அக்கா எல்லாரையும் மிஸ் பண்றீங்களா?''கேட்கும் போதெல்லாம்''இல்லையே''என்றிடுவாள்.முன்பு தகப்பனிடம் ஒட்டிக் கொண்டு இருந்தவள் இப்போது விலகத் தொடங்கினாள். சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் கோபப்படுவது வழக்கமாயிற்று. மேற்கத்திய நாடுகளில் பிறந்த குழந்தைகளின் இயல்பான பழக்கங்கள் அவளையும் ஒட்டிக்கொண்டன.தட்டாமல் அவள் அறைக்குள் சென்றாலோ.தட்டி விட்டு பதில் வருமுன் அறையுள் நுழைந்தாலோ கோபப்படுவாள்.தன் பொருட்களை யாரும் தொட அனுமதிக்க மாட்டாள். சிறுவயதிலிருந்தே சுதந்திரப் போக்கு கொஞ்சம் அதிகமாகவே அவளிடமிருந்தது. தந்தை ஏதாவது கேட்டால் ''ஏன் என்னட்டை மூக்கை நுழைக்கிறீங்க?'' என்பாள்.தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்வுகள் சில பார்ப்பதில் சில சொற்களை எங்கு சொல்ல வேண்டும் என்று தெரியாமல் சொல்லிவைப்பாள்.''நீங்க என்னுடைய ப்ரண்சிடம் கதைப்பது எனக்கு அவமானமாக இருக்கு'' என்பாள். அதிலென்ன அவமானம் என்று கேட்டால் சொல்லத்தெரிவதில்லை. தமிழ் கதைப்பது அவள் பெற்றேருக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் அரைகுறைத் தமிழினால் சில குழப்பங்கள் ஏற்படுவது உண்டு. மூத்தவர்கள் இருவரும் அழகாக நன்றாகப் புரிந்து தமிழ் பேசுவார்கள். தாய் தமிழ்க்கதைகள் கூறுவதும் பழமொழிகள் கூறுவதும் பிள்ளைக ளுக்கு மொழியாற்றல் வளர உதவியது.ஆர்த்திகா மட்டும் சிலவற்றைப் புரிந்துகொள்ள சிரமப்படுவாள்.தாய் சில அவசரமான நேரங்களில் இலகுவில் புரிய வைப்பதற்காக ஆங்கிலத்தில் கதைத்தால் ¨அம்மாநாக்கு கதையுங்கோ. என்னைத் தமிழில் கதைக்க சொல்லீற்று நீங்க மட்டும் ஏன் ஆங்கிலம் கதைக்கிறீங்க¨என்பாள். முதலில் இவர்கள் புரியாமல் முழித்ததும் பின் புரிந்ததும் சிரிப்பாக இருந்தது. ¨மதர் ரங் என்பதைத்தான் ஆங்கிலத்தில் அம்மாநாக்கு என்று அவள் சரியாக மொழிபெயர்த்திருக்கிறாள்.மதர் லங்வேஜ; என்றால்தான் தாய் மொழி.¨கீர்த்திகா சொன்னாள்.ஆர்த்தி சிக்கின் கறியை கோழிக் குழந்தைக்கறி என்பாள். மற்றவர்களுக்கு சிரிப்பாகவும் குழந்தையைக் கறியாக்கி உண்பது என்று சொல்வது கொடுரமாகவும் இருக்கும். விளக்கம் கேட்டால் ¨சிக்கின் என்றால் கோழிடை குழந்தை தானே¨என்பாள்.முதலில் இவர்களுக்கு புரியவில்லை. பின் புரிந்ததும் சிரித்தார்கள்.கோழிக்குஞ்சு என்று சொல்லிக் கொடுத்தால் ¨நான்தான் அம்மாடை குஞ்சு. கோழிடை பிள்ளை குஞ்சு இல்லை¨என்பாள். தந்தை ஆர்த்திகாவை¨ஏடாகூடப்பிள்ளை¨என்றே கூப்பிடுவார். அவளைச்சுற்றி எந்நேரமும் சிரிப்பும் கலகலப்பும் இருந்து கொண்டேயிருக்கும்.அப்படிப் பட்டவள் சிரிப்பு மறந்து வாடிய பூப்போல இருப்பது எல்லோரையும் கவலைப்பட வைத்தது.

தாய் ப்ரியம்வதா மகளைத் தூண்டித்தூண்டி கேட்காது விட்டாலும் பாடசாலையில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்க ஆரம்பித்தாள். தகப்பனும் அவளை மகிழ்ச்சிப்படுத்த வெளியில் கூட்டிப்போனாலும் அவளை விட்டுக் கலகலப்பு மறைந்தே இருந்தது. அவளது ஃபிரன்ட் சிலர் அடுத்தடுத்து வேறு பள்ளி மாறியதாக தாய் அறிந்தாள். ஒலிவியாவின் அம்மாவைத் தற்செயலாக சந்தித்தபோது தான் கணவனை விட்டுப் பிரிந்துவிட்டதாகச் சொன்னாள்.'நாங்கள் அடிக்கடி சண்டை போடுறது பிள்ளைகளுக்கும் நல்லதில்லை. அவர் கூட குடிக்கிறதும் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதும் பிள்ளைகளைப் பாதிக்கும்.என்னுடைய வளர்ந்த மகன் இதனால் பாதிக்கப் படக்கூடாது என்பதிதனால் நாங்கள் பிரிந்து வி;ட்டோம்¨என்று சொன்னாள்.இப்போது விளங்கியது ப்ரியம்வதாவுக்கு.இந்த விடயங்கள் அவர்கள் குடும்பத்தை மட்டுமன்றி தன் பிள்ளையையும் பாதிப்பதை உணர்ந்து கவலைப்பட்டாள் பிரியம்வதா.

சில நாட்களாகவே தன்னுடைய ஃபிரன்ட் வாறதில்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தாள் ஆர்த்திகா. விசாரித்ததில் அவள் ஃபிரன்ட் வேறிடம் போய் விட்டதாக அறிந்தாள். பின் அதுபற்றி ஆர்த்திகாவோடு கதைக்கவும் ¨ஓமம்மா.ஒலிவியா போனதுதான் எனக்குப் பிடிக்கேலை. அவவுக்கு பெரிய பிரப்ளம்.அவ எப்படியிருக்கிறா என்றதுதான் என்ரை பிரச்சனை¨. சின்னப் பிள்ளைகளுக்கும் பிரச்சனைகள் இருக்கும் அதை நாங்க நினைக்கிறதேயில்லை நினைத்தாள் ப்ரியம்வதா.¨சரி.அவவுக்கு என்ன பிரச்சனை¨.¨அவவின் அப்பா அம்மாவை டிவோஸ் பண்ணீற்றாராம்.இப்ப அவை வேறை வீட்டை போயிட்டினம்.வேறை பள்ளிக்கு மாறிற்றா. அவவுக்கு அப்பா வேணும் என்று சொல்லுவா.யூலியாவும் தன்னுடைய அம்மாவோடை தனியப் போகப்போறா.வீக் என்ட்க்கு மட்டும் அவ அப்பாட்டை போறாவாம்.அப்பாவோடை இன்னுமொரு பொம்பிளை இருக்காம்.தனக்கு அவவைப் பிடிக்காதாம். அவவிடை மகனும் அங்குதான் இருக்கிறானாம். அவனைப் பார்த்தாலே தனக்கு கோபம் வருகுதாம். அம்மா அட்ஜஸ்ட் பண்ணச் சொல்றாவாம்.தன்னாலை அட்ஜஸ்ட் பண்ண முடியாதாம். இதெல்லாம் எனக்கு ப்ரப்ளம் இல்லையா?வகுப்பிலும் இதையே நெடுகச் சொல்லுவா.அவ ஹப்பி இல்லாமல் இருந்தால் நான் எப்பிடி ஹப்பியாய் இருக்க முடியும். அவவும் ஸ்கூல் மாறினால் நான் என்ன செய்கிறது?நான் பிரண்ட்ஸ் இல்லாமல் இருக்கிறதா?ரீத்துக்கும் இதே பிரப்ளம். அவனின் அப்பாவும் அம்மாவும் நெடுக சண்டை பிடிப்பினமாம். அம்மா சொல்றாவாம். நாங்க பிரியப்போறம் என்று. ரீத்தோடை அம்மா வேறை கல்யாணம் செய்யப்போறாவாம்.அந்தப்புது அப்பா ரீத்துக்கு வேண்டாமாம்.ஆனால் அந்தப்புது அப்பாடை வீட்டில் தானாம் இனி இருக்க வேணுமாம்.அப்ப அவனும் வேறை பள்ளிக்கூடம் போயிடுவான். இது எல்லாம் எனக்கு பிரப்ளம் தானே.எல்லா பிரண்ட்சும் இப்பிடியேபோனால் நான் தனிய பிரண்ட் இல்லாமல்¨அழுகைவெடிக்கப் பேச முடியாமல் பேசினாள். ¨பள்ளியிலும் பிரப்ளம்.வீட்டிலையும் பிரப்ளம். நீங்களும் அவங்களைப் போல பிரிஞ்சிடுவீங்களா? நீங்க சில நேரம் சண்டை பிடிக்கேக்கை எனக்கு பயமாயிருக்கு¨ கட்டி அணைத்த தாய்¨சியரப் குஞ்சு. அப்பிடி யெல்லாம் நாங்க பிரியமாட்டம். அப்பா சில பிழைகள் விட்டால் அப்பிடியே விடுறதா?சொன்னா அவர் கேட்காட்டி அம்மா சிலநேரம் கத்துவன்.அப்பாவும் கத்துவார்.அவ்வளவு தான். இது எல்லாம் உங்கடை விசயங்களில்லை.நீங்க இதுபற்றி யோசிக்கக் கூடாது. அக்கா அண்ணாவைப் பாருங்கோ.அவை தங்கடை பாட்டிலை படிப்பு மட்டுந் தானே பார்க்கினம்.இப்ப உங்களுக்கு முக்கியம் படிப்பு மட்டுந்தான். பெரிய ஆட்களுடைய விடயங்களைக் கவனிக்காதேங்கோ¨. முதுகைத் தடவி பலமுறை நெற்றி.கன்னம்.தலை என்று மாறிமாறி முத்தமிட்டு மகளை அமைதிப்படுத்தினாள். எப்படிப்பட்ட துன்பத்தையும் மாற்றும் திறன் அன்புடன் இடும் முத்தத்திற்கு உண்டு என்றுபிரியம்வதாவுக்குத் தெரியும்.தானும் அம்மாவைத் திரும்ப முத்தமிட்டபடி அக் குழந்தை தற்காலிகமாக அமைதியானாள்.

தங்களது வாக்குவாதங்கள் பிள்ளைகளை எவ்வளவு தூரம் பாதிக்கிறது என்பது இப்போதுதான் அவர்களுக்கு விளங்கியது. மென்மையான குழந்தைகளின் உணர்வைத் தாங்கள் கவனத்தில் கொள்ளாதது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தார்கள். தம்மைச் சுற்றி நடக்கும் சிறுசிறு விடயங்கள்கூட அவர்களைப் பாதிப்பதை இப்போதுதான் உணரத் தலைப்பட்டார்கள்.தங்கள் வீட்டில் மட்டுமன்றித் தங்கள் தோழர்களின் வீட்டில் நடப்பதுகூட அவர்களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது. அதனால் அவர்கள் எவ்வளவு மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள் என்பது புலப்பட்டது.தம்உணர்வுகளை வெளிப்படுத்தவோ சொற்களால் சொல்லவோ தெரியாத வயதில் அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளாது தம்பாட்டுக்கு சண்டை பிடிப்பதும் தம் பிரச்சனைகளைப் பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டுதான் எல்லாப் பெற்றார்களும் செயல்படுகிறார்கள். இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டு தாமும் மன உளைச்சலுக்கு ஆளாகும் குழந்தைகளை யார் நினைக்கிறார்கள்? பெற்றோர்களால் எவ்வளவு குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள்.தங்கள் தங்கள் உணர்வுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் பெற்றோரால் எத்தனை சிறுவர்கள் மனநலம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை யாருமே சிந்திப்பதில்லையென்ற உண்மை பொட்டில் அறைந்ததுபோல் பிரியம்வதாவுக்கு புரிந்தது.தாயகத்தில் உறவினர் சூழ வாழ்வதும் பெருமளவில் வெளியில் சென்று விளையாடுவதால் வீட்டில் நடப்பவற்றை கூர்ந்து கவனிக்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போவதும் பிரியம்வதாவுக்குப் புரிந்தது.

குழந்தைகள் உலகம் புனிதமானது.கண்ணாடிபோல எந்தக் களங்கமும் அற்றது.அவர்களுக்கு மகிழ்ச்சியை அள்ளித் தராவிட்டாலும் பரவாயி ல்லை.கவலைப்பட வைக்கும் செயல்களைச் செய்யாது இருக்க வேண்டுமென்று உறுதி பூண்டாள் பிரியம்வதா. குழந்தைகள்.சிறுவர்கள் பாதுகாப்பென்பது எவ்வளவு பெரிய விடயமென்பது இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது. உணவூட்டி வளர்ப்பது மட்டுமே பெற்றவர்கள் கடமையாகாது.உடைகள் விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை வாங்கிக் கொடுப்பதும் நல்ல பாடசாலையில் சேர்த்து நலல் கல்வி கொடுப்பது மட்டுமல்ல பெற்றோரின் கடமை. அதற்கும் மேலே அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பெரிய பொறுப்பு உள்ளதை தன் மனதில் இருத்திக் கொண்டாள். கணவனுடனும் இதைப் பகிர்ந்து கொண்டாள். தன் மகள் மகிழ்ச்சியாக இருக்க வேணுமென்றால் அவளைச் சுற்றி இருக்கின்ற மற்ற உறவுகளும் நேர்த்தியாக இருக்க வேண்டுமென்பது புரிந்தது.



சாயிராம். தஞ்சாவூர்

## யுத்தம்

நடக்கிறது போர்
இடிபாடுகளின் நடுவே
சிக்கிய சடலங்களை
மீட்கும் பணியில்
வீரர்கள்..
திறந்த மார்ப்புடன் பெண் சடலம்
ஸ்ரெக்சரில் தூக்கி செல்ல
பின் தொடரும்
அழுகுரலுடன்
தத்திநடக்கும் குழந்தை
தொலைக் காட்சி செய்தியின்
சிறப்புக் காணொளி
கண்கலங்கி தான் போனேன்...
வீட்டின் நடுவே
குத்துக்கல்லாய்
பட்சணத்துடன்
கொலுப்படி தெய்வங்கள்.

சா. கா. பாரதி ராஜா

## எச்சரிக்கை

வரிசைக் கட்டிச் செல்லும்
வாகனங்களை
வேகவேகமாக
கடந்து செல்கிறது
மருத்துவ அவசர ஊர்தி

துடிக்கும்
ஒரு உயிரின்
அலறலாய்
ஊர்தியின் சத்தம்

வருந்தி
இரக்கம் காட்டி
மக்கள் பலர்
வழிவிட

வேகவேகமாக
பயணிப்பவன்
அலட்சியமாக
கடந்து செல்கிறான்
அதில் கலந்திருந்தது
அவனுக்கான
எச்சரிக்கை ஒலியை!



# அடையாளம்

நௌஷாத் கான் லி அபுதாபி

டே...இர்பான் நமக்குள்ள இனிமே எதுவுமே செட்டாகாது.. விட்டிடலாம் எல்லாத்தையும் இன்னையோட விட்டிடலாம்.

*PAST IS PAST.*

நீ உன் வாழ்க்கையை பார்த்துக்கோ, நான் என் வாழ்க்கைய பார்த்துக்கிறேன். இனிமே என் வாழ்க்கைல வந்து குறுக்கிடாதே.

பாசம் பைத்தியக்காரத்தனத்தின் அடையாளம்ன்னு இன்னைக்கு புரிஞ்சுக்கிட்டேன் ஜாஸ்மின்.இந்த உலகம் பணம் இல்லைன்னா எவ்வளவு கேவலமா பார்க்கும், ஒதுக்கும்னு இன்னைக்கு உன் மூலமா புரிஞ்சுக்கிட்டேன்

இங்க நல்ல குணம், நல்ல மனம் எவனும் -எவளும் பார்க்கிறது இல்லை. நல்ல வேலை, நல்ல சம்பளம் அப்புறம் சொத்து இருந்தா தானே மதிப்பீங்க. இத்தனை நாளா எனக்குன்னு ஒரு ஜீவன் இருக்குன்னு ரொம்ப லூசுத்தனமா நம்பியிருக்கேன்.என் நம்பிக்கை எனக்கு நிறைய ஏமாற்றத்தை கொடுத்து இருக்கு உன்னையும் சேர்த்து!!

இங்க பாரு இர்பான் வாழ்க்கை சினிமாயெல்லாம் கிடையாது.. எந்த ஒரு விஷயத்தையும் பிராக்டிக்கலா பார்க்கணும்.உன்னை காலேஜ் படிக்கும் போது உண்மையா லவ் பண்ணேன் ஒத்துக்குறேன்..நீ படிப்பை விட உன் சினிமா பேஷன் தான் முக்கியம்னு உங்க அப்பா -அம்மா சேர்த்து விட்ட இன்ஜினியர் படிப்பை தூக்கி போட்டிட்டு சினிமாவுல சாதிக்க போறேன்னு போனியே என்ன ஆச்சு?

வருஷம் போனது தான் மிச்சம்..உங்க வீட்ல கூத்தாடி பொழப்பு எல்லாம் எதுக்குடா?மார்க்கத்துக்கு ஆகாத ஹராமான விஷயமெல்லாம் நம்ம குடும்பத்துக்கு எதுக்குடான்னு உன்னை காரி துப்பியும் கூட நீ திருந்தினியா?

பிலிம் மேக்கிங், ரைட்டிங், டைரக்சன் மயிறு மட்டைன்னு பேசி, நீ உப்புமா படத்துல கால்தூசி பெறாத பேட்டா வாங்கிட்டு எடுபுடி வேலை செஞ்சதை தவிர உன் வாழ்க்கைல என்ன புடுங்கி இருக்க??

நம்ம ஜமாத் பசங்கள பாரு அதிகமா படிக்கலைன்னாலும் பத்தாம் கிளாஸ் படிச்சதுமே பாஸ்போர்ட் எடுத்திட்டு அரபுநாட்டுல போய் கூலி வேலை பார்த்தாவது குடும்பத்தை காப்பாத்துறானுங்க..தடிமாடு வயசு ஆவுதே நீ உன் குடும்பத்துக்கு என்ன பண்ண??

உன் அம்மாவுக்கு ஒரு முழம் பூவு வாங்கி கொடுத்து இருக்கியா?ஐம்பது வயசு ஆகுதே உன் வாப்பாவின் உழைப்பு சுமையை குறைச்சு வச்சு இருக்கியா??அடலீஸ்ட் உன் தங்கச்சிக்கு பீரியட் டைம்ல உன் சொந்த காசுல ஒரு நாப்கினாவது வாங்கி கொடுத்து இருக்கியாடா??

இப்படி பட்ட உன்னை நம்பி என்னை காத்திருக்க சொல்றியாடா??

இங்க பாரு ஜாஸ்மின் நீ சொல்லுறது எல்லாமே சரிதான்.ஆனா சினிமா என் குருதியில ஊறிப்போன ஒண்ணு பணத்துக்காக நான் சினிமாவை தேர்ந்தெடுக்கலை அது என்னோட பேஷன், உயிர் எல்லாமே சினிமா தான்.நிச்சயமா இந்த ஊரு உலகம் வியக்குற மாதிரி ஒரு நல்ல படத்தை எடுத்து ஜெயிப்பேன்..எங்க அம்மா, வாப்பா, தங்கச்சி தேவைகளை எல்லாம் நிச்சயம் ஒருநாள் பூர்த்தி செய்வேன்..என் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு ஜாஸ்மின்..

காலேஜ் படிக்கும் போது என் கதைகளை படிச்சிட்டு நீ பெரிய ஆளா வருவேன்னு நீ தானடி எனக்கு முதல் நம்பிக்கை கொடுத்த??

இப்ப நீயே உதவாக்கரை, ஒண்ணுத்துக்கும் உருப்படாதவன்னு சொன்னா நான் எங்கிட்டுடி முறையிடுவேன்??

இந்த இக்கட்டான சூழ்நிலையில நீதானடி எனக்கு ஆதரவா இருக்கணும்,பேசணும்??

இங்க பாரு இர்பான் ஏதோ காலேஜ் படிக்கும் போது காதல் மயக்கத்துல சினிமாத்தனமா பேசி உனக்கு நம்பிக்கை வளர்த்திட்டேன் ஆனா வெறும் கனவுகளும், ஆசைகளும் வாழ்க்கைக்கு உதவாது..

உன்னை நம்பி இனிமே என்னாலே காத்துக்கிட்டு இருக்க முடியாது..எனக்கும் வயசு ஏறிக்கிட்டே போகுது. எனக்கு நல்ல வேலையில உள்ள மாப்பிள்ளையை வீட்ல பார்த்து இருக்காங்க, நானும் அவரையே கட்டிக்க ஓகே சொல்லிட்டேன்..பையனும் வீட்டுக்கு ஒரே பிள்ளை, நல்லஅழகு, சொத்து வேற நிறைய இருக்கு..இந்த வர்ற வாய்ப்பை வேண்டாம்னு சொன்னேனா என்னை போல பைத்தியக்காரி இந்த உலகத்துல கிடையாது..

காதல் வாழ்க்கையோட ஒரு பகுதி தான் அதுவே முழு வாழ்க்கையும் கிடையாது..உன் வாழ்க்கைல நடந்த நம்ம காதல் அத்தியாயத்தை கனவு போல நினைச்சு மறந்திடு...

குட்பை...எல்லாத்துக்கும் சேர்த்து தான்...

பதில் பேச வார்த்தைகளிலிருந்தும் அவன் மௌனம் காத்தான்..பேசாத மௌனங்களுக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருக்கு..கண்ணீர் கடல் அவனையும் அறியாமல் பூமியை நனைத்தது..கண்ணீர் நல்லது, வலிகளை குறைக்கும் அவள் காலடி சுவடுகளை கண்ணீர் அறிந்த கண்கள் அந்த திசையை அவள் கடக்கும் வரை பார்த்து கொண்டே இருந்தது..

சில வருடங்களுக்கு பிறகு...

யோவ்....இர்பானு..என்னமா கதை எழுதி இருக்கேயா, *WHAT A WRITING*??வேற லெவல் யா??

ஏமாத்திட்டு போற ஹீரோயின், ஹீரோ அவளை அடிப்பானா??கொல்வானான்னு நினைச்சுக்கிட்டு இருக்கிறப்ப, அந்த காதலையும், காதலியையும் கடைசிவரைக்கும் மறக்காம எல்லாவற்றையும் கடந்து போய் தன்னுடைய லட்சியத்திலும் ஜெயிக்கிற மாதிரி கதையா செமயா இருக்கு..இது மாதிரி பாசிட்டிவ் வைப்ரேஷன் உள்ள கதைதான் எனக்கு பிடிக்கும்.. இப்பவெல்லாம் தான் ஒருதலையா காதலிக்கிற பொண்ணு காதலிக்கலைன்னா ஆசிட் ஊத்துற கலிகாலம்யா, பொம்பள புள்ளைய பெத்தவனெல்லாம் வயித்துல நெருப்பை கட்டிக்கிட்டு வாழுறான்..இப்படிப்பட்ட சூழ்நிலையில இதுபோல தான் படம் எடுக்கணும்யா..

ஒரு டைலாக் எழுதியிருக்க பாரு??

உன்னை ஒருத்தங்க ஏமாத்திட்டா கோபப்படாதே, கடந்து போ..இந்த வாழுற வாழ்க்கை ஒவ்வொருத்தங்க மூலமா ஒவ்வொரு விஷயத்தையும் கற்று கொடுக்கும். கற்றுக்கொடுத்தவனை குருவா பாரு, விரோதியா பார்க்காதே.. நல்லது செஞ்சா திருப்பி செஞ்சிடு, கெட்டது செஞ்சா உன் துரோகிக்கு கூட அதை திரும்ப செய்யாதே, பாசம் பைத்தியக்காரத்தனத்தின் அடையாளம் வேஷம் போடும் மனிதர்கள் மேல அளவுக்கதிகமா வைக்காதேன்னு சொன்னியே அந்த ஒரு வார்த்தை தான்யா திருவாசகம் போல என் மனசுல ஒட்டிகிடுச்சு..

இந்த கதையை நாம்ம பண்ணுறோம்..நாளைக்கே நீ ஆபிஸ் போட்டிடு..இந்தா அஞ்சு லட்சம் அட்வான்ஸ்னு இர்பான் கைகளில் அஞ்சு லட்சத்திற்க்கான காசோலையை வைத்தார் தயாரிப்பாளர் ராயப்பன்..

ஆமா ராசா...ஒண்ணு கேட்க மறந்திட்டேன்..

படத்துக்கு என்ன பேரு வச்சு இருக்கே??

ஜாஸ்மின்!!

தங்கேஸ்

# தங்கேஸ் கவிதைகள்

மழை மேகமாக
தழும்பிக்
கொண்டிருக்கும் மனது
எப்போது உடையுமோ?
அதில் யார் நனையப் போகிறார்களோ?

துயரங்களின் துயரம் என்னவென்றால்
மனதை ஒருவர் சொந்தம் கொண்டாடுவதுதான்
சகியே

ஒரு கைப்பிடி அன்னம் போல
அதை எடுத்து
இந்த நதியில்
விட்டு போ
மீன்களுக்காவது இரையாகட்டும்

❍

காகிதக் கப்பலாவது
மழைநீரில் சிறிது
பயணிக்கும்
இந்த மனது?

ஆனால் நீயோ இதன் மீது
இன்னும் சில மனதுகளையும்
ஏற்றி விட்டு

பத்திரமாய் கரையில்
கொண்டு போய்
சேர்த்து விடுவாய் தானே
என்று என்னை கேட்கிறாய்

❍

பாராமல் செல்வது போல்
பார்த்து விட்டுத் தான் சென்றாள்
சட்டென்று என் நிழல்
என் தலைக்குப் பின்னால்
உயரமானதை
நான் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன்

❍

கதவை தட்டிக்கொண்டு
இது எத்தனை பேர்கள்
உள்ளே நுழைவதற்கான கதவு?

நாகரீகம் கருதி உள்ளே நுழைபவர்கள்
கதவை தட்டிவிட்டாவது வரலாமல்லவா?

இத்தனை பேர்கள் உள்ளே நுழைந்தால்
உள்ளே இருப்பவர்கள்
வெளியறிவிடவேண்டும்தானே?

நானும் கூட அப்படித்தான் நினைத்திருந்தேன்
வீடென்று சொல்லிவிட்டு
வெளியில் தானே
வசிக்கிறாய் என்றது ஒரு குரல்

வாஸ்து பார்த்து கட்டினாலும் சரி
சாதக கட்டங்களை
கூட்டி கூட்டி கணித்தாலும் சரி

மரவட்டைக்கு விளக்குமாற்று குச்சி
மண்புழுவுக்கு கரம்பை புழுதி
நத்தைக்கு ஊமச்சி கூடு
தவளைக்கு பாசிக்குளம்
மனிதனுக்கு தெருக்கோடி
உடனே
ஒரு மின்னல் வெட்டு

மழைத்துளிகள் கதவை தட்டிக்கொண்டு
வீட்டிற்குள் நுழையவில்லை
நானும் அப்போது வீட்டிலில்லை




# ஆன்மாக்களின் தரிசனம்

**மனோகரன்கிருஷ்ணன் (மலேசியா)**

கைப்பேசி அலறிக்கொண்டிருந்தது. வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் போது கைப்பேசியை எடுத்துப் பேசலாமா வேண்டாமா என்ற மனநிலையில் அதை ஒன் செய்தார்.

‘என்னடா இன்னும் கிளம்பிலையா’ என்று அம்மாவின் குரலுக்கு,

‘இதோ இப்பதாம்மா கெந்திங் மலையவிட்டு இறங்கறே’

என்று மறுமொழியைப் பகர்ந்து கைப்பேசியை அடைத்துவிட்டு மகிழுந்தின் ஸ்டேரிங்கை இன்னும் இருக்கமாகப் பிடித்தார்.

வளைவான பாதைகள் பல ஏற்ற இறக்கமேன நிறைந்திருந்தது ஆனாலும் விரைவாக ஓடக்கூடியது அகலப்பாதைதான்.

மணி இரவு 12 யை நெருக்கியது…

இன்னும் ஒரு சில நிமிடத்தில் செப்பா கெந்திங்கை கடந்து விட்டால் போதும் வளைவுகள் இல்லாமல் நேர் பாதையில் வண்டியை செலுத்தி ஸ்ரீ கோம்பாகில் இருக்கும் தன் வீட்டை அரை மணி நேரத்தில் அடைந்து விடலாம் என்று நினைத்து தனது வாகனத்தின் வேகத்தை முடுக்கி விட்டார் செந்தில் நாதன்.

அழகான வாலிபர். 30 வயதை கடந்திருந்தார். இன்னும் திருமணம் ஆகாவில்லை. அம்மாவின். பேச்சை தப்பாமல் கேட்கும். நல்ல பிள்ளை அவர். அம்மா தான் பெண் பார்க்கும் படலதை ஆரம்பித்திருந்தார்.

சுற்றியும் மலைப்பாங்கான பகுதி.சில இடங்களில் படு பாதாளம் பாய்விரித்திருந்தது.சாலையின் இரு மறுங்கிலும் அடர்ந்த காடுகள். பல இடங்களில் பாதையை நேர்படுத்தியிருந்தாலும் இன்னும் பல இடங்கள் மரணப்பாதையாகவே செந்தில் நாதன் கண்களுக்குத் தெரிந்தது.

இரவு பயணம் என்றாலே அவருக்குச் சற்று அலர்ச்சியைக் கொடுக்கும். அதுவும் இந்த நடுநிசி ஜாமத்தில் இந்த இருண்ட காட்டில் வாகனத்தைச் செலுத்துவது என்பது ஒரு வகையில் பயத்தைத் தந்தது அவருக்கு.என்ன செய்வது? அவர் வழி நடத்தும் வியபாரம் சூடு பிடித்துச் சிறந்த முறை வெற்றிக்கனிகளைப் பறித்துக் கொடுத்து தானும் நல்ல தொழில் முனைவராக வளர்ந்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் பல கருத்தரங்கங்கள் மற்றும் ஒன்றுகூடல் இந்தக் கெந்திங் ஒன் வேல்ட் மாநாட்டு மண்டபத்தில் நடைப் பெறுவதால் அடிக்கடி வந்து போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் செந்தில் நாதன்.

அது சற்று இறங்குமுகமான பாதைதான். அதைத் தொடர்ந்து சமவெளி கொண்ட காட்டுப் பாதையில் சில கடைத் தெருவும் கொண்ட சிறுநகர் அங்கு ஒளிவெள்ளத்தைப் பாச்சியபடி உயரமான தெரு விளக்குகள் எரிந்துக்கொண்டிருந்தன. அதைக் கடந்த போது, அங்கொங்ன்றும் இங்கொன்றாகச் சில பங்களா வீடுகள் சிறிய மங்கலான வெளிச்சத்தில் அவர் கண்ணில் பட்டு கடந்து போனது. இருட்டில் எந்த இழவும் தெரியாமல் அடர்ந்த காட்டின் நிழல் மட்டும் அங்கு அமைதிக்கொண்டது.

அங்கு இருக்கும் வீடுகள் கண்டிப்பாகப் பணக்காரர்களின் வீடாகத்தான் இருக்கும். ஆர்ப்பரிக்கும் வாழ்க்கையில் அமைதியை நாடி அங்கு வந்து ஓய்வு எடுத்து கலைந்து செல்லும் தொழில் அதிபர்கள் அங்கு வீடு வாங்கிப் போட்டு அவ்வப்பொழுது அங்குத் தங்கியும் செல்வார்கள். சில வீடுகள் கேப்பார் அற்றுக் கிடக்கிறது என்று நண்பர் தமிழ்வாணன் சொன்னதை நினைவுக்கூர்ந்தார்.

என்றும் இல்லாமல் பந்தம் போல் இன்று அவரின் வாகனம் சற்று வேகமாகத்தான் பறந்துக்கொண்டிருந்தது. ஒரு வளைவை கடந்து போது

அதோ அதோ...

அந்த மேட்டில் அந்த மேட்டில்...

என்ன அது என்று நிதானிக்கும் முன் யாரோ ஒரு மனிதனை மோதி தள்ளிய வேகத்தில் சாலையைவிட்டு தறிகெட்டு ஓடி பக்கத்தில் இருந்த பெரிய ராட்சஷ மரத்தில் மோதி பள்ளத்தில் சரிந்து தலைக்குப்பற கவிழ்ந்து நின்றது செந்தில் நாதனின் விலையுர்ந்த மகிழுந்து.

சற்று மயக்க நிலையில் இருந்து மீண்ட செந்தில் நாதன் சுத்திமுத்தி பார்த்தார். மகிழுந்தின் முன் கண்னாடி உடைந்துவிட்டது. வாகனத்தின் முன்புறமும் நொருங்கி கிடந்தது.பக்கக் கதவு கூட உடைந்து கிடந்தது அதன் வழி வெளியே வந்து விழுந்த செந்தில் நாதனின் உடல் அசைவற்றுக் கிடந்தது.

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தார் என்று தெரியவில்லை. முழிப்பு வந்த போது எழுந்து நின்றார். அவரின் கைப்பேசியைத் தேடினார்.எங்கே தொலைந்தது என்று தெரியவில்லை.

தன்னைச் சுதாகரிந்துக்கொண்டு பள்ளத்தில் இருந்து மேலே சாலையை நோக்கி ஏறினார். தலையில் ரத்தம் வடிந்துக்கொண்டிருந்தது. நெஞ்சுப் பகுதி வின் வின்னென்று வலித்துக்கொண்டிருந்தது.

அந்த நெடுஞ்சாலையில் கொஞ்ச நேரம் மயான அமைதியை காத்தது. திடிரென வெளிச்சத்தை உமிழ்ந்து ஒரு வாகனம் வந்துக்கொண்டிருந்தது. செந்தில் நாதன் தடுத்து நிறுத்த முனைந்தார். அந்த வாகனம் நிறுத்தாமல் ஓடியது. அதே போல் பல வாகனங்கள் அவரைக் கடந்து சென்றாலும் எந்த வாகனமும் நிறுத்தவில்லை.

எதோச்சையாகப் பார்த்தார். பாதைக்கு எதிர் புறம் ஒரு பங்களா வீடு, அவரின் கண்ணில் பட்டது. மின்சார விளக்கு இல்லாமல். அந்த வீடெங்கும் அகல் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது. சரி அங்குப் போயாவது உதவி கிடைக்கிறதா என்று பார்ப்போம் என்று சாலையைக் கடந்து செடி கொடிகளை முட்களை நீக்கி அந்த வீட்டின் அருகே சென்றார்.

'யாரது'

ஒரு அதட்டல் குரல். குரல் வந்த திசையை நோக்கினார் செந்தில் நாதன். யாரோ ஒருவர் மதுரை வீரன் மீசை, வாயில் நெருப்பு பற்றவைத்த சுருட்டு. வேக வேகமாக அதன் புகை வெளியில் விட்டுக்கொண்டிருந்தார்.ஒரு நொடி சப்பத நாடியெல்லாம் அடங்கி மீண்டு வந்தது செந்தில் நாதனுக்கு.

'எதுக்கு இங்கு வருகிறாய்' இரவு நேரத்தில் இங்கு வரகூடாது, தெரியுமா உனக்கு,

என்று மீண்டும் அந்தக் குரலின் அதிகாரம் அவரைத் திகைக்க வைத்தது.

'என் வாகனம் அதோ சாலையில் விபத்தில் சிக்கிவிட்டது. எதாவது உதவி கிடைக்குமா என்று

தேடி வந்தேன்' என்று சொன்னவுடன்

'உதவியா? உனக்கா?'

பெரும் சிரிப்பு சிரித்துவிட்டு

'போ போ கிடைக்கும் உதவி என்றார் அந்த மதுரை வீரன்.

ஆளை விட்டால் போதும் என்று அந்த அகல் விளக்கு எரியும் வீட்டை நோக்கி நடையைக் கட்டினார் குழப்பத்தோடு.

அந்தக் காலத்து பழைய வீடு.. வீட்டின் முன் புறம் பெரிய தேக்கு மர தூண்கள். வாசல் கதவும் பெரிய மரப்பலகையில் வேலைப்பாடு மிகவும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருந்தது.

உள்ளே விளக்குகள் பல எரிந்துக்கொண்டிருந்தது ஆனால் யாரும் இல்லை.கதவை தட்டி ஓய்ந்து போனது அவரின் கை.

உடம்பு அடித்துப் போட்ட மாதிரி அலுத்துப் போனது. நெஞ்சு பகுதி வின் வின்னென்று வலிக்க ஆரம்பித்தது. சரி வேற எங்காவது உதவி கிடைக்குமா என்று அந்த இடத்தை விட்டு கிளம்ப ஒரு அடி முன்னெடுத்து வைத்தார்.

எங்கிருந்தோ ஓடி வந்த கர்ண கொடுரமான ஒரு நாய் ஆவேசமாகச் செந்தில் நாதனை பார்த்துக் குரைத்தது. வந்த வேகத்தைப் பார்த்தால் அவரின் குரல் வளையைக் கடித்துக் குதறிவிடும் போல் இருந்தது. உண்மையில் ஏதோ ஒரு ஆவேச பேய் ஒன்று அவரை மிரட்டி விட்டுச் சென்றது போல் அரண்டு தான் போயிருந்தார்.

வீட்டின் உள்ளிருந்து கொலுசு சத்தம் கேட்டவுடன் வாசலை நோக்கி பார்த்தார்.ஒரு அழகான யுவதி ஆடி அசைந்து நடந்து வந்தாள். இதுவரை பார்க்காத தேவதை, உலக அழகிகள் தோற்றார்கள் போங்க. என்ன அழகு?

செந்தில் நாதன் அவளைப் பார்த்துப் பிரமித்துப் போய் இருந்தார். வைத்த கண்ணை எடுக்காமல் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த விளக்குகளின் வெளிச்சத்தில் தங்கச் சிலைப்போல் தகதகவென மின்னியது அவள் மேனி. மோகினியா இல்லை தேவலோக தாரகையா என்று ஒருகணம் பிரமித்துதான் போனார்.

என்னவேண்டும் என்று அவனைப் பார்த்து கண்ணசைத்தாள்.

'உதவி வேண்டும். என் வாகனம் பழுதாகிவிட்டது உங்களிடம் தொலைப்பேசி இருந்தால் கொடுங்கள் என் நண்பரிடம் விசயத்தைச் சொல்ல வேண்டும்' என்றார்.

இல்லை என்பதற்கு அடையாளமாக உதட்டை பிதுக்கினாள்.

தேடிவந்த உதவி கிடைக்காது என்று நினைத்தாரோ என்னவோ! மீண்டும் திரும்பி வந்த வழியில் வெளியேற நினைத்து திரும்பினார்.

'சாலைக்குப் போய் மறுபடியும் வாகனத்தை நிறுத்த போறிங்களா? அர்த்த இரத்திரியில் யார் உதவுவார்கள். இங்கு யாரும் வண்டியை நிறுத்த மாட்டார்கள். பேசாம இந்த வரண்டாவில் படுத்து உறங்கி நாள போங்க' என்றாள் அந்த அழகு பதுமை.

பௌர்ணமி நிலவு தன் முழு முகத்தை அள்ளித் தெளித்தது போலும் திடிரென அந்த இருண்ட வனம் நிலவின் வெளிச்சத்தில் அகப்பட்டுக் கொண்டதோ என்னவோ...நாணத்தோடு வந்த நிலவு அந்த வீட்டுத் தின்னையில் அழகாகத் தெரிந்தது அவருக்கு. பக்கத்தில் உயர்ந்த தூண்களின் ஓரத்தில் அப்படியே தலைச்சாய்த்தார்.

சூரியவெளிச்சம் சுளிரென அடிக்கவும் கண் விழித்துப் பார்த்தார். என்ன ஆச்சரியம் யாரோ ஒருவள் செத்த சாமாதியில் படுத்திருக்கின்றார். திடுக்கிட்டு எழுந்தவர் விருவிருவெனச் சாலையையை நோக்கி ஓடினார்.

பள்ளத்தில் இருந்து அவரின் வாகனத்தை இழுத்துக்கொண்டுடிருந்தது தோவிங் வண்டி ஒன்று. வெளியே வந்தது அவரின் வாகனம். வண்டியை நோக்கி ஓடினார் செந்தில் நாதன்..அங்கிருந்தவர்களிடம்

'இது என் வண்டி இது என் வண்டி'


என்று சொல்லி அலறிக்கொண்டிருந்தார். யாரும் எதுவும் கண்டுக்கொள்ளவில்லை. அவர்களின் காரியத்திலே கண்ணாய் இருந்தார்கள்.

பூரணமாக வெளியே வந்த வாகனத்தில் செந்தில் நாதனின் உடல் அவரின் மகிழுந்தின் ஸ்டெரிங்கை இருகப் பற்றியபடி அங்கேயே இருந்தது.

யாரோ ஒருவன் அவனின் மேல் அதிகாரியிடம் கைப்பேசியில் உரையாடிக்கொண்டிருந்தார்.

' சார் செத்துட்டான் சார். நெஞ்சிலே பலமான அடிபோல ஆள் ஓன் தெ ஸ்போட் அங்கியே அவுட்டு சார்'

செந்தில் நாதனோ சிலைப்போல் நின்று அவரின் செத்த உடலை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தார்.



கவிஜி

# தெற்குடைந்த இரவு

உழுத காடு தான்
உதறி விட்டார்கள்
மழையில்லை
என்பதெல்லாம் சும்மா
மனதில்லை
ஆளுக்கொரு திசையில்
அண்ணன் என்ன தம்பி என்ன
அவரவர் கூட்டுக்கு
பறந்து விட்டார்கள்
எதற்கும் வராதவர்கள்
இதற்கு
வந்து தானே ஆக வேண்டும்
அம்மா மரித்து
அப்பாவும் புதைந்து விட்டார்
எல்லாம் மாறி இருக்க
நிலமும் அதன் யுகமும் கூட
எங்கேயோ நின்று விட்டன
காரியங்கள் கடமையேற
உயிர் ஒடுங்கிய நிலத்தைக்
கொண்டு என்ன செய்வது
கை மாற்றி விட்டு
பை பிரித்துக் கொண்டார்கள்
மேற்கே கிணறொட்டிய
வரப்புவரை பெரியவனுக்கு
கிழக்கும் மேற்கும் முட்டும்
தோப்புவரை சின்னவனுக்கு
வடக்கும் கிழக்கும்
சேர்த்திருக்கும்
பனை அடி சேர்த்து நடுவனுக்கு
அம்மா அடிக்கடி முனங்குவது
கேட்கிறது
அப்பா ஆமோதித்து சாமி பார்ப்பது
தெற்கில் தெரிகிறது
தாத்தனோ அவர் அப்பனோ
நட்ட சாமி அது
என்ன செய்வது
வாங்கியவர்கள் ஏதாவது
செய்து கொள்ளட்டும்
முடிவெடுத்த அன்று
மூவருமே கிளம்பி விட்டார்கள்
நம்புவதற்கு சிரமம் தான்
ஊர் கிறுக்கின் விசும்பல்
வழக்கத்தை விட
அன்றிரவு அதிகமாக இருந்தது
ஊர் கடந்த அசலூரான்
இட்டேரி தாண்டுகையில்
பார்த்திருக்கிறான்
கல்லாய் நின்ற சாமி
கடகடவென உடைந்து
நிலத்தோடு நிலமாய்
ஆகியிருக்கிறது...!

வில்லரசன்(இலங்கை)

# வில்லரசன் கவிதைகள்

### 01. அநாதியின் சொற்கள்

வனாந்தரத்தில் அநாதியாய்த்
தனித்து விடப்பட்ட மிருகம்
யாரிடமும் கேட்பதில்லை
வீடு திரும்புதலுக்கான வழிகளை

காகக் கூடொன்றில்
ஏதிலியாய் கைவிடப்பட்ட இளங்குயில்கள்
மறந்து போவதில்லை
தம் சொந்த கீதங்களை

மந்தைக்கூட்டமொன்றிலிருந்து
தவறுண்டு போன
செம்மறிக்குட்டிகளின் ஓலம்
கேட்பதே இல்லை
எந்தக் காதுகளுக்கும்

வௌவால்களும்
காகங்களும் கூட
வீடடையும் இந்த அந்தியில்
முகவரிகளற்ற அநாதைச்சிறுவன் வானத்தில்
துலாவிக் கொண்டிருக்கிறான்
தன் வீட்டின் நிழலை



### 02. இரட்சகர்கள்

வெண்ணிற ஆடையில்
வதனமெங்கும் குதூகலத்துடன்
திராட்சை ரசக் கோப்பைகளை
கைகளில் உயர்த்தியபடி காதருகில் மெல்லமாய்
வந்து
நேசிக்கிறேன் என்கிறார்கள்...

காலப்போக்கில்
என் சிறகுகளை வர்ணம் தீட்டுவதாக பிடுங்கிக்
கொள்கிறார்கள்
என் பற்களை வலிமைப்படுத்துவதாக உடைத்து
விடுகிறார்கள்
என் நாவுகளை இனிமையாக்குவதாக துண்டித்து
விடுகிறார்கள்...

இக்கணத்தில்
புனித உத்தரியங்களை தூர வீசி
பிசாசுகளாய்
மாறும் அவர்களனைவரும்
முன்பொருநாளில்
மீட்பர்களாய்தான் இருந்தார்கள்..

### 02. தவம்

மேசையிற் கிடக்கும்
புத்தர் சிலையைப் போல்
கண்களை மூடிக்
கால்களை மடித்து
தியானத்தில் உட்கார்ந்து
ஒவ்வொன்றாய்த்
தொலைக்கிறேன் துயரங்களை.

எந்தச் சலனமும் இல்லாமல்
நிசப்த அமைதியில்
நிம்மதி கைகூட
மரப்புத்தராய் இல்லையே
நானும்.

## ரகுநாத் வ மதுரை

*சாவி கிடைக்கும்வரை*
*திறந்தே கிடக்கின்றன*
*பூட்டும் கதவும்!*

❍

*எறும்பை எறும்பாகவே*
*காட்டுகிறது*
*எறும்பு கட்டிய புற்று!*

❍

*தன்னம்பிக்கையோடு*
*கையுயர்த்துவதால்*
*உயர்கிறது தென்னை!*

❍

*மலருக்கு மலர்*
*நிறம் மாறுகிறது*
*நிறமற்ற நீர்!*

❍

*கண்ணாடிச் சாளரம் வழியே*
*வெளிச்சத்தை*
*ஊற்றுகிறது வெயில்!*

❍

*ஓர் ஈசலுக்கு*
*வழிகாட்டினால்*
*சுடர்விடுகிறது தீபம்!*

❍

*சாவியிடம் கோபப்பட்டதாய்*
*கவிழ்ந்திருக்கிறது*
*பூட்டு!*

❍

*பின்னோக்கிச் சுழலும்*
*கடிகாரமாகிறது*
*மனது!*

❍

*தரும் கரங்களைப் பொறுத்து*
*பணி செய்கிறது*
*மருந்து!*

❍

*இறுதியாக*
*பேரம் பேசி*
*முடிக்கப்படுகிறது நிம்மதி!*

❍

*பூக்களால்*
*நிரம்பிவிடுகிறது*
*செடியின் தலை!*

❍

*இரவின் டாடாவிற்கு*
*கையசைக்கிறது*
*சேவலின் கூவல்!*

❍

*பாதி நிலா*
*மீதியெல்லாம்*
*வானத்தின் பிறை!*

❍

*ஒரு புள்ளிதான் வைத்தாள்*
*அதுவும்*
*கோலமெனப்படுகிறது!*

❍

*சாக்கடை*
*ஓரங்களில் அழகிய பூக்கள்*
*சிலர்!*

❍

*சுற்றிலும் 'வாக்கிங்' செல்ல*
*ஏதுவாக இளைத்தது*
*குளம்!* _

❍

*தூக்கத்தில் தாஜ்மஹால்*
*எழுந்ததும் விழுந்து*
*நொறுங்கியது கனவு!*



# நீர்த்துப் போகாத நினைவுகள்

சுந்தரிமணியன், புதூர்

மாலையில் வீசும் தென்றலின் குழுமையில் மனம் மகிழ, இன்னொரு பக்கம் வானொலியில் ஒலித்த ‘நீலவான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா’ என்ற எனக்குப் பிடித்தமான சினிமாப் பாடலின் இனிமையில் மனம் கரைந்து போயிருந்தேன். வீட்டிலிருந்த ஆச்சி எதற்கோ அடிப்போடுவதுபோல் இருந்தது.

“எப்படீ ஸ்கூல் விட்டு வந்த? வயித்துவலி சரியாயிருச்சா” எனப் பரிவாய்க் கேட்க,

“என்ன ஏதாவது திட்டத்தோட இருக்கியா ஆச்சி? பாசம் பொங்குது” என்றேன் நான்.

“இல்லடி எனக்குத் தண்ணி தாகமா இருக்கு? உங்க அப்பனுக்குத் தெரியாம ஐஸ்கிரீம் வாங்கிட்டு வர்றியா” என்றாள்.

“சரி இரு ஆச்சி. சமயம் பார்த்து வாங்கிட்டு வர்றேன். எனக்கும் சேர்த்து காசு தா. அம்மாவுக்குத் தெரியாம வாங்கிட்டு வர்றேன்” என்றேன். அதற்குள் அங்கு வந்த அம்மா ரகசியமாக நாங்கள் பேசுவதைப் பார்த்து,

“ஆச்சியும் பேத்தியும் எனக்குத் தெரியாம என்னமோ திட்டம் போடுற மாதிரித் தெரியுதே. என்ன சேதி” என்றாள்.

“இல்லம்மா ஆச்சி வயிறுவலி சரியாயிருச்சான்னு கேட்டாங்க. சொல்லிக்கிட்டிருந்தேன். அவ்வளவுதான்” என்றேன்.

“சரிசரி கைகால் அலம்பிட்டு வந்து காப்பியக் குடி” என்றாள் அம்மா. எனக்கு அப்பாடா என்றிருந்தது. எங்களது திட்டத்தை அம்மா கண்டுபிடிக்கவில்லை. இல்லையென்றால் அப்பாவிடம் போட்டுக் கொடுத்து, அப்பா ஐ.நா சபையில் நிற்கவைப்பது போல் நிற்கவைத்துக் கேள்வி கேப்பார். பதில் சொல்வதற்குள் போதும் போதும் என்றாகிவிடும்.

ஆறாவது படிக்கும் என் பெயர் கயல்விழி. எனக்கு ஆச்சியை ரொம்பப் பிடிக்கும். அவ்வப்போது ஆச்சியுடன் சேர்ந்து வீட்டிற்குத் தெரியாமல் ஐஸ்கிரீம், பன்னீர் சோடா, மாங்காய், மிட்டாய் எனக்குப் பிடித்தவைகளையும் ஆச்சிக்குப் பிடித்தவற்றையும் சேர்ந்து வாங்கி வீட்டுக்குத் தெரியாமல் சாப்பிடுவதில் நாங்கள் இரண்டு பேரும் கூட கில்லாடிகள்.

ஆறு மணிக்கு மேல் ஆனதும் ஆச்சியைப் பின்வாசலுக்கு வரச்சொல்லிவிட்டு நான்

“அம்மா ஸ்கேல் வாங்கிட்டு வாறேன்” என்று கூற, அம்மா,

“நேத்துத்தான ஸ்கேல் வாங்குன. ஓயாம காசு விளையுதா?” என்றாள்.

“நீ ஒண்ணும் காசு தரவேணாம். அப்பா வாங்கித் திங்க குடுத்த காசு இருக்கு. நான் வாங்கிக்கிறேன்” என்று சொல்லிவிட்டு வேகவேகமாக வீட்டைவிட்டு வெளியில் நடந்தேன். இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தால் அம்மா கேள்வி கேட்டே கொன்றுவிடுவாள்.

இரண்டு ஐஸ்கிரீம் வாங்கியபின் வீட்டின் பின்புறம் இருந்த கொல்லையில் ஆச்சியுடன் சேர்ந்து சாப்பிட்டேன். பிறகு,

“ஆச்சி நீ பின்னாடி வழியப் போ. நான் முன்னாடி வர்றேன். இப்படியே வந்தா அம்மா கண்டுபிடிச்சுரும்” என்று சொல்ல, ஆச்சி,

“இந்தாடீ ஸ்கேலு” என்று தன் முந்தானையில் மறைத்து வைத்திருந்த ஸ்கேலைக் கொடுக்க வீட்டின் முன்பகுதிக்குச் சென்றேன். வீட்டிற்குள் போனவுடன்,

“ஒரு ஸ்கேல் வாங்க இவ்வளவு நேரமா? எங்கடீ ஊர் சுத்தப் போன?” என்றாள் அம்மா.

“இல்லமா. பக்கத்து வீட்டு மீனாட்சியத்தைத் துணிக்கடைக்குப் போகுது. உன்ன கூப்டலியா? எங்க போனாலும் உன்னக் கூப்பிட்டுப் போகும்” என்று ரூட்டைமாத்தி விட்டேன். உடனே அம்மா ஆர்வமும் கோபமும் பொங்க,

“நிசமாவா கயலு. ஒரு வார்த்தை கூட என்கிட்டச் சொல்லல” என்றாள். பக்கத்து வீட்டு விசயத்தைத் தெரிந்து கொள்வதில் அம்மாவுக்கு அலாதிப் பிரியம். மீனாட்சி வீட்ல எதுவும் விசேஷமா? எங்கிட்ட சொல்லாம இருக்கமாட்டாளே? என அம்மாவுக்குள் பல சிந்தனை ஓட்டங்கள்.

ஆச்சியும் நானும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டோம். நான் படிக்க அமர்ந்தேன். இவ்வாறாக என்னுடைய பள்ளிநாட்கள் எல்லாம் சுவாரசியமாகச் சென்று கொண்டிருந்தன. ஆச்சியைப் பிரிந்து அம்மாச்சி ஊருக்குப் போவதென்றால் கூட எனக்குக் கஷ்டமாய் இருக்கிறது.

நாட்கள் உருண்டோடுவதே தெரியவில்லை. நான் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். ஆச்சிக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. எப்போதும் வருவதுபோல் இளைப்பு வேறு. இரவு நேரங்களில் வரும் இளைப்பு இன்னிக்குப் பகலில் தெரிய, ஆச்சி சோர்ந்து போய்விட்டாள்.

நான் காலையில் ஸ்கூல் போகும்போதே,

“கவலைப்படாத உடம்பு சரியாயிரும். நாம ரெண்டுபேரும் அம்மாவுக்குத் தெரியாம ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடுவோம். ஒழுங்கா சாப்பிடு” என்று ஆறுதல் சொல்லிவிட்டு பள்ளிக்குக் கிளம்பினேன்.

பள்ளிமுடிந்து மாலையில் வீடு திரும்பும்போது வீடு நிறைய ஆட்களாய் இருப்பதைப் பார்த்து, திகைத்து என்னன்னு தெரியலையே என்று உள்ளே நுழைந்தேன். உள்ளேயுள்ள ஹாலில் ஆச்சி மர நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டிருந்தாள். அம்மா பக்கத்தில் அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள். என்னையும் அறியாமல் ‘ஆச்சி’ எனக் கத்திக்கொண்டே அவளின் பக்கத்தில் சென்று ஆச்சியின் மேல் படுத்து அழுதேன். கன்னங்கள் இரண்டிலும் கண்ணீர் வழிந்தோடியது. அம்மா,

“கயலு உங்க ஆச்சியப் பாத்தியா. இப்படி போயிருச்சு. நினைச்சுக்கூட பார்க்கலியே” என்று கதற என்னால் ஆச்சியின் இழப்பிலிருந்து மீண்டு வரமுடியாமல் உறைந்து விட்டேன். ஆச்சி இறந்து ஒரு மாதமாகியும் என்னால் சரியாகச் சாப்பிடமுடியவில்லை.

“அம்மா ஆச்சிய மறக்கமுடியல” என நான் அழும்போதெல்லாம் “சரி விடு. மறந்துதான் ஆகனும். ஆச்சி உன்னோடவேதான் தெய்வமா இருப்பாங்க” அம்மா தேறுதல் சொல்ல அமைதியானேன்.

ஆச்சி இறந்து பல ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில் எனக்குத் திருமணமாகி எனது மகள் நிலாவும் நான் செய்தது போலவே தனது ஆச்சியுடன் சேர்ந்து எனக்குத் தெரியாமல் கூல்டிரிங்ஸ் வாங்கிக் குடிக்கையில் தாங்கமுடியாத கோபம் வந்தாலும் உள்ளூர நமுட்டுச் சிரிப்புடன் எனது ஆச்சியின் பசுமையான நினைவுகளில் மூழ்கிப் போகின்றேன்.

# யோ. புரட்சியின் "செல்லமுத்து" – (புதினம்) மதிப்பீடு

**சிறீ சிறீஸ்கந்தராசா**


ஒரு நாவலை ஒதுக்குவதற்கோ பாராட்டுவதற்கோ நமக்கு நாவலின் கூறுகளைத் தெரிந்திருக்கவேண்டும்.

நாவல் என்னும் சொல் புதுமை என்ற பொருளைத் தரவல்லது.

இச்சொல் '*Novela*' என்னும் இத்தாலியச் மொழியிலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

இந்தப் புதிய வகை இலக்கியம் ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் உருவானது. ஆனால் பத்தாம் நூற்றண்டிலேயே சீனாவில் நாவல்கள் இருந்துள்ளதாக பதிவுகள் கூறுகின்றன.

நாவலைப் பரிசோதனை முயற்சியாகவே முதலில் எழுதினர்.




இத்தாலி நாட்டைச் சேர்ந்த பொக்காசியோ என்ற எழுத்தாளர் தன்கதையினை எழுதினார். அதன் பெயர் "தெகாமரன்" ஆகும்.

இதுவே புதினத்திற்கான முன்னோடியாகக் கருதப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து சாமவேல் ரிச்சட்சன் என்பவர் 1741 ஆம் ஆண்டில் "பமிலா" என்ற நாவலை எழுதினார். இதுவே உலகின் முதல் நாவல் என்று கருதப்படுகின்றது.

நாவல் என்பது தமிழில் திசைச்சொல்லாக அப்படியே கையாளப்படுகிறது. புதினம் என்றும் சொல்லப்படுகிறது.

1876 ல் வெளிவந்த "பிரதாப முதலியார் சரித்திரம்".

இது மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்டதாகும்.

சில வருடங்களுக்கு பின்னர் வெளிவந்த இரு நாவல்கள்

இராஜம் அய்யர் எழுதிய "கமலாம்பாள் சரித்திரம்",

அ. மாதவையா எழுதிய "பத்மாவதி சரித்திரம்".

தமிழ்ப் புதினத்தின் தந்தை என வேதநாயகம் பிள்ளை போற்றப்படுகின்றார்.

இவருடைய மற்றொரு புதினம் "சுகுண சுந்தரி சரித்திரம்" ஆகும்.

இவற்றுள் புதின உத்திகள் கொண்டு விளங்குவது "கமலாம்பாள் சரித்திரம்" மட்டுமேயாகும்.

ஏறத்தாழ இக்காலத்தில் ஈழ இலக்கியத்தில் முதல் நாவல் உருவானது.

சித்தி லெப்பை மரைக்காயர் எழுதிய "அசன்பே சரித்திரம்" ஈழத்தில் வெளிவந்த முதல் நாவலாகும்.

வரலாற்று நாவல்கள் உலகில் தோன்றுவதற்கு முக்கிய காரணியாக அமைந்தது பிரஞ்சுப் புரட்சியாகும்.

தமிழில் தோன்றிய முதல் வரலாற்று நாவல் "மோகனாங்கி" என்பது வரலாற்று ஆய்வாளர்களதும், இலக்கியத் திறனாய்வாளர்களதும் கருத்தாகும்.

தமிழில் வரலாற்று நாவல்களை எழுதியதில் முன்னோடியாகத் திகழ்பவர் கல்கி. அவரைத் தொடர்ந்து அகிலன் திகழ்கின்றார்.

சாண்டில்யன் தமிழில் மிகுதியான வரலாற்று நாவல்களை எழுதினார்.

தமிழில் சமூகவியல் நோக்கில் நாவல்களை எழுதுபவர்களில் முன்னோடியாக பொன்னீலன், பிரபஞ்சன், ஜெயமோகன், எஸ். இராமகிருஷ்ணன் போன்றோர் காணப்படுகின்றனர்.

தமிழின் தோன்றிய சமுதாய நாவல்களாக நெடுங்குருதி, காடு, ஏழாம் உலகம், புதிய தரிசனங்கள் போன்றவற்றைக் கூறலாம்.

சிறு கதையிலிருந்து வேறுபட்டு. பல நிகழ்ச்சிகளையும், செயல்களையும் தன்னகத்தே கொண்டு கதை மாந்தரின் பண்புகளுக்கு ஏற்ப ஒரு கதையை வளர்த்துச் சென்று ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் உரைநடை இலக்கிய வகையே நாவலாகும்.

இவ்வாறு நாவலை ஓரளவு வரையறை செய்ய முடிகின்றதே அன்றி முழுமையாகவும் நாவலின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாகவும் உள்ள ஒரு வரையறை தருவது கடினம்.

தனி மனிதனின் சிக்கல்கள் மற்றும் சமுதாய வாழ்க்கையின் பல பகுதிகளையும் சித்தரித்துக் காட்டவதற்குரிய நிகழ்விடமாகப் புதினத்தின் கதைக்களம் இருக்கும்.

இடங்களையும், மனிதர்களையும், பொருட்களையும் விபரிப்பது முக்கியமானது. இந்த விபரிப்பு மனக்கண்ணால் வாசிப்பவருக்கு மனதில் காட்சியை உருவகிக்க உதவுகிறது.

ஒரு செய்யுள் ஆரம்பம், மத்தியபகுதி, முடிவு என்பனவற்றைக் கொண்டதாக அமையும் என்று அரிஸ்டோட்டல் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்.

தொடக்கத்தில் பாத்திரங்களை அறிமுகப்படுத்தி இந்தக் கதை எதைப் பற்றியது என வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவது.

நடக்கும் சம்பவங்களால் கதை திருப்பப்படுகிறது.

எப்படி கதை நகர்ந்து முடிக்கப்படுகிறது என்பதை உணர்த்துவது.

நாவல் பற்றிய இத்தகைய ஒரு அறிமுகத்தோடு வள்ளுவர்புரத்தை வசிப்பிடமாகக் கொண்டு பல்வேறு இலக்கியப் பணிகளிலும் படைப்புக்களிலும் தன்னை முழுமூச்சாக ஈடுபடுத்திக்கொண்ட

யோ.புரட்சி என்பவரின் "செல்லமுத்து" எனும் புதினத்தை பின்வரும் உப தலைப்புகளின் கீழ் பொருத்திப் பார்ப்போம்.

### பொருத்தமான தலைப்பு

ஒரேயொரு பிரதான பாத்திரத்தைச் சுற்றியே கதை நகர்வதால் அந்தப் பாத்திரத்தின் பெயரையே தலைப்பாக வைத்திருக்கிறார்.

ஒரு படைப்பைக் கையில் எடுக்கும்போது முதலில் தெரிவது தலைப்புத்தானே. நல்ல வாசகனைக் கவரும் உத்திகளில் தலைப்பு மிகச் சிறப்பிடம் பெறுகின்றது.

ஒரு படைப்பிற்கு தலைப்பு என்பது மிகவும் பிரதானமானதாகும்.

அது எத்தகையது என்பதனை தலைப்புத்தான் வாசகனுக்கு அறியத் தருகின்றது.

இதனை வாசித்து முடிக்கும்போது இந்தத் தலைப்பிற்கும் இவருக்கும் எதோ நெருங்கிய தொடர்பிருப்பதைப் போன்ற ஒரு உணர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

### நிகழ்காலக் கதைக்கரு

போர்கிழித்த இந்த மண் தன் வலிகளையும் துயர்களையும் தாங்கிக்கொண்டு எப்படி நிமிர்ந்து எழுகின்றது என்பதனை ஒரு ஏழைக்குடிசையின் வாசலிலிருந்து எழுதிக்காட்டுகிறார்.

ஒரு ஏழைக்குடிசையின் ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் எப்படி எப்படி எல்லாம் கழிகின்றது என்பதனை மிகவும் பக்கத்தில் இருந்து பார்த்தது போல எழுதிச்

செல்லுகின்றார்.

இந்த நாவலின் கதைக்கரு மிகவும் எளிமையானது சிக்கல்கள் ஏதுமில்லாதது.

பாத்திரங்களின் அமைப்பு முறை

அதிகளவில் அலட்டிக்கொள்ளாமல் ஒரு சிலபாத்திரங்களின் துணைக்கொண்டு கதை மிகவும் அற்புதமாக நகர்த்தப்பட்டிருகிறது.

பாத்திரங்களின் அமைப்பு எனவகையில் முதல் பாத்திரம் செல்லமுத்தாகும்.

இப்பத்திரம் கல்லிலே கடவுள் சிலை வடிப்பதைப் போன்று மிகவும் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றது.

"நேரம் இரவு எழுமணி.

கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் பாட்டாளிபுரம் கிராமத்தின் சுந்தரத்தார் காணியில் புல்வெட்டும் வேலைக்குப் போயிருந்த செல்லமுத்து மண்வெட்டியோடு வீடு திரும்பியிருந்தாள்"

முதல் பாத்திரத்தை இப்படி அறிமுகம் செய்கின்றார். இதிலிருந்து இந்த பாத்திரந்த்தின் சகல பண்புகளையும் சுபாவங்களையும் ஒரு தரமான வாசகனால் ஊகித்துக்கொள்ள முடிகிறது.

"மாலை வேளையில் வெளியே போகும் கணவன் காளியப்பன்தான் அதை எடுத்துச் சென்றிருப்பன் என்பது செல்லமுத்துவுக்குத் தெரியாதா? பீடியும் தீப்பெட்டியும் இல்லாமல் அவன் வெளியே போகமாட்டானே"

கணவன் என்ற இரண்டாவது பாத்திரத்தை இப்படி அறிமுகம் செய்து காட்டுகின்றார். பீடியும் தீப்பெட்டியுமாக அலைபவன் எப்படியும் ஒரு குடிகாரனாகத்தான் இருப்பான் என்பதை ஆசிரியர் சொல்லாமல் சொல்லும் விதம் அற்புதமானது.

"வெப்பமரத்தோடு அண்டிய கருங்கல் சிலையை மழை நனைக்காமல் சிறு தகரத்தால் காவல் கொடுத்திருந்தார்கள். சாஸ்திரி ஐயாகூட தகரத்துக்கு வெளியே நின்றுதான் பூஜை செய்வார். இன்று செல்லமுத்துவின் மகன கண்ணாவும் பூஜைக்குப் போயிருக்கிறான்"

மூன்றாவது பாத்திரமும் மிகவும் சிறப்பாக அறிமுகமாயிற்று.

இவ்வாறாக எலும்பும் சதையும் இரத்தமும் கொண்ட உயிருள்ள பாத்திரங்களை எம் கண்முன்னே உலாவ விடுவதன் மூலம் உயிருள்ள படைப்பு ஒன்றினை ஆசிரியர் தந்திருக்கின்றார். பாராட்டுகிறோம்!

**நுட்பமான கதைப்பின்னல்**

அதிகமான கிளைக்கதைகளை இடையே செருகுவதன் மூலம் மூலக்கதையை அடிக்கடி மறக்கடிக்கச் செய்யும் மிக அபத்தமான கதைப்பின்னலை வாசகனுக்குத் தந்து அவனை மழுங்கடிக்கச் செய்யக்கூடிய அதி மேதாவித்தனமான யுத்திமுறைகள் எதனையும்

ஆசிரியர் இங்கே கையாளவில்லை.

வாசகனும் பிழைத்துக்கொண்டான், படைப்பும் தரமானதாக நிமிர்ந்து நிற்கிறது.

எம்மைப் போன்ற கீழ்மட்ட நிலை வாசகனைக் கருத்தில் கொண்டே இந்த படைப்பு நகர்த்தப்பட்டிருகின்றது.

கதையை வளர்த்துச் செல்லும் பாங்கு

கோலம் போடுவது போல ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு நேர்கோடு இழுப்பது போல கதை இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது.

அந்த நூலில்கூட சிலஇடங்களில் தொய்வைக் காணலாம், ஆனால் இந்தப் படைப்பில் எங்கேயும், கழுகுக் கண்கொண்டு பார்த்தேன் தொய்வேதும் தென்படவில்லை.

ஒருவேளை கிளைக்கதைகள் அதிகம் இருந்திருந்தால் ஒருவித தொய்வு நிலை ஏற்பட்டிருக்கலாம்.

**சாத்தியமான மொழிநடை**

மிக எளிமையான வட்டாரப் பேச்சு வழக்கில் ஆசிரியர் மிகக் கைதேர்ந்திருக்கின்றார். வலிந்து கோர்க்கக்ப்படாதத எழுத்துக்களும் சொற்களும் படைப்பைத் தரமுயர்த்துகின்றது

"நீ தேவ இல்லாம அதை இத சாப்புடாதை மொத, அதான் புள்ளைக்கு.நீ புட்டுக்கு தேங்காய்ப்பூ போட்டு சாப்புடுறே. அதான் கொண்டா புள்ளய"

............

நாளைக்கி வயித்தால போகாது, ஒமம் சும்மா குடுக்காதை, நீ கட்டுப்பாடா சாப்புடு. நா சந்திக்கா கடைக்குப் போகணும். வர்றேன்"

கிராமத்து மணம் வீசும் இந்தப் பேச்சு வழக்கில் உள்ள வழுக்களை இலக்கணம் அனுமதிக்கின்றது.

தங்கிலிசையோ, பிறமொழிச் சொற்களையோ இங்கே காணமுடிவதில்லை.

"காவல்துறை" "பொலீசார்" என்ற சொற்கள் இங்கே ஏதேச்சையாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

"காவல்துறை" என்பது தற்போது எமது வழக்கில் இல்லை.

"பொலீசார்" என்ற பதமே வழக்கிலுள்ளது.

### ஆசிரியரின் தனிப்பட்ட அனுபவம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளுவர்புரம், பாட்டாளிபுரம் ஆகிய கிராமங்களைச் சுற்றியே கதை நிகழ்கின்றது.

இத்தகை பிரதேசங்களில் வாழும் இவருக்கு இந்தக் கிராமங்களின் சூழ்நிலை, காலநிலை, தொழில் வாய்ப்புகள் மக்களின் வாழ்க்கை முறைகள் பேச்சு வழக்கு... நடை உடை பாவனை எல்லாவற்றையும் இவர் நன்கு அனுபவித்து அவற்றின் சுவை குன்றாது எழுதியிருக்கிறார்.

### மிகப் பொருத்தமான முடிவு

இத்தகைய சோகமான முடிவுகள் வாசகனின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. செல்லமுத்துவுக்கு ஏற்பட்ட முடிவை வாசகன் மட்டுத்மள்ள நாமும் எதிர்பார்க்கவில்லை.

படைப்பின் இறுதிப் பக்கம் வரைக்கும் எந்தவொரு வாசகனாலும் இந்த முடிவை ஊகிக்க முடியவில்லை. ஆசிரியருக்கு சிறப்பான பாராட்டுக்கள்!

### முடிவுரை / மதிப்பீடு

ஒரு படைப்பின் வெற்றி தோல்விகளை பல காரணிகள் தீர்மானிக்கின்றன.

இருந்தபோதும் தரமான படைப்புகளை இந்த மண்ணும் மக்களும் இலுகுவில் மறந்துவிடமாட்டார்கள்!!

வெறும் புனைவுகளிலும் பார்க்க யதார்த்தமான படைப்புகளையே ஒரு தரமான வாசகன் விரும்புகிறான்.

புனைவுகளில் இலக்கியச் சுவை இருக்கலாம் ஆனால் மனிதனின் வாழ்க்கை முறைகள் இல்லையே!

புனைவுகள் வெறும் கற்பனைகளும் ஊகங்களும் கொண்டு எழுதப்படுபவை.

எவ்வளவு ஆழமாக எழுதியிருப்பினும் வாசகன் இலகுவில் இனம்கண்டு விடுவான்.

இதுபோன்ற இன்னும் அற்புதமான படைப்புக்களை இவரிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றோம்.

போர்க்கால இலக்கியங்கள் மட்டுமல்ல இத்தகைய படைப்புகளும் எமது வரலாற்றை எழுதிவைக்கின்றன.

இவரின் முயற்சிகள் யாவும் வெற்றிபெற வேண்டுமென மனதார வாழ்த்துவதில் பெருமை கொள்ளுகிறோம்!!

ஈழத்து நாவல் இலக்கியப் பரப்பில் ‘‘செல்லமுத்து’’ தனக்கென்று ஓர் முத்திரையைப் பதித்து நீடுவாழும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு!!

Dr ஜலீலா முஸம்மில்

# ஆன்மாவின் பேரிசை...

நேசத்தின் பித்தேறி
பாடல் ஒன்றை
முனங்கிக் கொண்டிருந்தேன்
என் பரவசப்பிதற்றலில்
உலகமே
என்னைப் பிரிந்து சென்றது
மெருகேற்றப்பட்ட
நேசக்கவிதையை
பெருங்கீதம் ஆக்கி
உன் மாபெரும் மௌனத்தில் விசிறி
எறிந்தேன்
என்ன ஒரு அதிசயம்
சாகா வரம் பெற்றது அந்தக் கவிதை
நேசம்
உன் மௌனநெருப்பு பற்றிப் பிடித்ததும்
ஆயிரம் கைகள் முளைத்து
மீண்டுமவை என்னைச்சூழ்ந்தன
அகண்ட வெளியொன்றில்
ஆழ்துளையின் அடியில்
எனைத்தள்ளிப்
பெருவாழ்வொன்றைப் பரிசளிக்கின்றன
அவை
நொதித்துக் குருதி வற்றிக்
கொட்டிக் கிடக்கும்
என்னை அண்மிக்கிறது
அந்திமப்பொழுதின் பூங்காற்று
சிதறி மறையாமல்
சலிப்பெய்தாமல்
ஆன்மாவை விடுவித்துச் செல்கிறது
அப்புள்ளியிலிருந்து
அந்த நேசகீதத்தை விடாது
இசைத்துக்கொண்டே இருக்கின்றன
என்
ஆன்மாவின் இழைகள்
என் நேசம்
உன் மௌனத்தின் மீது அல்ல
முழுக்க முழுக்க
உன் மீதுதான்!



வளவ துரையன்

## மழைமாலை

மழையொன்று மயக்குகின்ற மாலை தன்னில்
மனத்தினுள்ளே மத்தாப்பூ பூப்ப தைப்போல்
இழைந்தோடி வருகிறதாம் இதமாய் இங்கே;
இனிமையான கவிதைபோல இனித்தி ருந்து
வழிந்தோடிப் பெய்கிறது வாசம் வீசி;
வருகின்ற வழியெல்லாம் வாய்க்கால் தன்னில்
எழுகின்ற குமிழெல்லாம் என்னு ளத்தில்
என்றுமிங்கே நிலையாமை உரைக்கு மன்றோ?

கூட்டினிலே இருக்கின்ற குஞ்சுக் காக
குறுகியதோர் உணவெடுத்துச் செல்லும் புள்ளும்
தோட்டத்துச் செடிதன்னில் ஆடி ஆடி
தொடுஎன்னை என்றழைக்கும் அழகுப் பூவும்
ஆட்டமுடன் மழைநீரில் கப்ப லோட்டும்
அழகுமிகு சிறுவருமே அடையும் இன்பம்
வாட்டமுடன் தெருவோரம் கடைவி ரித்து
வசிக்கின்ற பெரியவர்க்கே இல்லை யன்றோ?
அவசரமாய்ப் பள்ளிவிட்டு வந்த வர்கள்
அங்குமிங்கும் விரைவாக ஓடு கின்றார்;
தவறுசெய்த திருடன்போலத் தண்ணீர்ப் பாம்பு
தப்பித்து மறைகிறது கல்லி டுக்கில்;
சுவர்தன்னில் தெளிக்கின்ற மழைநீர் எல்லாம்
சுறுசுறுப்பாய் அழகுமிகு கோலம் போடும்;
எவருக்கும் ஒன்றுபோல மழையின் மாலை
எப்பொழுதும் இருப்பதில்லை உண்மை யன்றோ?

சொ.கோட்டீஸ்வரன்

## நகர மயானம்

குழிக்குள் இறக்க
குறைந்தது மூவர்
வேலையாள் இருவர் போக
அவசர அழைப்பில்
இறங்கினேன்
சொந்தமென்றே.
கால்களில் குத்தியது
அழுகாதா பிணத்தின்
எலும்பு.

ஜனங்களின்
அடர்த்திக்கு பத்ததா
மயானம் அழுகக் கூட விடாத
அவசரத்தில் அடுத்தவனுக்கும்
அதே குழி பிணவாடையுடன்.

நகர மக்களே புதைக்காதீர்கள்
எரித்து விடுங்கள்.
சாம்பல் கரைக்க
சமூத்திரமிருக்கு.



# அகம்

### அ,முத்துவிஜயன்

அவன் அவனோட சம்சாரத்தோட தான் பொறந்த நாட்டுக்குத் திரும்பி வந்திருந்தான். தலைநகரில சில வேலைகள் முடிச்சிட்டுஓய்வெடுத்துட்டு மறுநாள் ஒரு திட்டமிட்டான், மனைவியைக் கூப்பிட்டுச்சொன்னான்" ஒரு எடத்துக்கு நாம இன்னின்னிப் போறோம்"ன்னு கூப்புட் டான்.. எங்க போறோம்னு சொல்லுங்க ன்னாஅவ.. நம்மலோட பழைய வீட்டப் பாக்கப்போறோம்னு சொன்னான்..

நாம வாழ்ந்த அந்தப்பூர்வீக வீட்டையா" நு கேட்டா அவ அவன் "ஆமா இன்னிக்கிப்போயே ஆகனும்னான்.. சரி இருங்க கெளம்பி வாறேன்னு கெளம்பப்போனா" அவஅவன் அந்த சின்ன வீட்டுலதான் 35 வருசம் குடித்தனம் நடத்துனது.. அம்மா அப்பா பிள்ளை குட்டிக எல்லாம் சேந்து குடித்தனம் நடத்துனது அங்கதான்..

அது சிக்கனமான வீடு அவன் வருமானத்துக் குள்ள சமாளிக்கக் கூடியவீடு.. ஒரு ஹால் ஒரு பாத்ரூம் ஒரு அடுப்படி அதுக்குக்கதவு எல்லாம் கெடையாது.. பாத்ரூம் கதவு இருக்குறதே பெருசு... அதுக்குள்ளதான்

ஒண்டிக் குடித்தன முன்னு சொல்லு வாங்களே அது சரியாப் பொருந்துற வீடு..அதுஅதுக்குள்ள தான் எல்லாம் அம்மா அப்பா பிள்ள குட்டி எல்லாம் ஒன்னோட ஒண்ணு நெறுக்கி அடிச்சிக்கிட்டு படுத்துக்கெடப்பாக. தனியா பெட்ரூமெல்லாம் கெடையாது..

ஒண்ணுமேல ஒண்ணு கெடக்கும்.. தலகாணி சண்ட பெருசா நடக்கும்.. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் தலகாணி உண்டு..பிள்ளக தூக்கம்வாரவரைக்கும் தலகாணி கெடைக்கும் தூங்குனவன்ன அது அடுத்த ஆளுக்குப் போயிறும்..காலையில பாத்ரூம் போறது பெரும்சண்ட வெளிய நின்னுக்கிட்டு அவசரத்துக்கு கதவ ஒடப்பாங்க... ஆறுபேர் அதுலதான் போகனும்குளிச்சிட்டு டிரெஸ்சேஞ்ச் பெண்கள் எல்லாம் அடுப்படிலதான் பண்ணிக்கனும்

பிரைவசி சுத்தமாக்கெடையாது..எல்லாம் ஒண்ணுமுன்னாத்தான்... கெடக்கும்

பழைய டிரங்குப்பெட்டிலதான் டிரஸ் எல்லாம் ஆளாலுக்குதனிப்பொட்டி.. சின்ன புள்ளக ளுக்கும் அவனோட சம்சாரத்துக்கும் ஒரே பொட்டிதான்... கொஞ்சம் பெருசு

அந்த 10க்கு 10 ஹால்லதான் சாப்பாடு படிப்பு அப்புறம் எல்லாமே... வீட்டுக்குள்ள எப்பையும் ஆளுக இருக்கும்.. ஒரு பார்வை ஒரு உரசல் யாரும் பாக்காம ஒரு முத்தம்...எங்கயோ பாத்துக்கிட்டு இடுப்புல ஒரு கிள்ளு இது குடுத்த சந்தோசங்கள் இப்பயும் நெஞ்சுக்குள்ள கெடக்கு...

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தனியாக நடக்குமொரு காதல் நாடகம்..அம்மா அப்பாவைக்கவனிக்கிற கரிசனம் அவருக்கு சாப்பாடு பக்கத்துல ஒக்காந்து வைக்கிறது அப்ப நடக்குற கிண்டல் அதுக்கு அம்மாவோட வெக்கம் எல்லாம் தனியாக நடக்கும்.. நிகழ்வுகள்.....

அவனுக்கும் அவளுக்கும் நடக்கும் சண்டை சமாதானம் ஊடல் கூடல் அதுவும் அங்கதான்

அன்னிக்கி ஒருநா அப்புடித்தான் அமைஞ்சது அப்பாவும் அம்மாவும் சொந்தக் காரங்களைப் பாக்க பக்கத்து ஊருக்குப்போயிருந்தாக பிள்ளைக பள்ளிக்குடம் போயாச்சு...அப்ப அவன் வேலைக்கி இன்னிக்கி நான் போகனுனுமான்னு,,இழுத்தான்.... அவ சொன்னா ஒங்க இஸ்டம்ன்னு... இவன் இல்ல இன்னிக்கி அம்மா அப்பா ஊரில இல்ல புள்ளைகளும் பள்ளிக் கொடத்துக்குப் போயாச்சு நாம மாத்திரம்தான் இதுமாதிரி சமயம் அமையாதுன்னு....வழிஞ்சான்

அவளுக்கும் வெக்கமாத்தான் இருந்துச்சு சரி நான் மார்க்கெட் போய் கறி எடுத்துட்டு வாறேன் சமையலுக்கு ஏற்பாடு பண்ணு ந்னு சொல்லிட்டு சைக்கிள் எடுத்துட்டுக் கௌம்புனான்...

மார்க்கெட்டுல எல்லாம் வாங்கிட்டு வெத்தல பாக்கும் வாங்கிக்கிட்டான்.. இன்னிக்கி வீட்டுல இருக்குறதே ஒரு சந்தோசமா தோணிச்சி வீட்டுக்கு வந்தா அவ குளிச்சிச்சிட்டு ஈரத்தலையோட மஞ்சள்பூசின மொகம் சோப்புவாசத்தோட ஜொலிச்சா... அவன் சீக்கிரமா சமையல முடி மத்தியானம் மீதி எல்லாம்ன்னு சிரிச்சிக்கிட்டே அவ கன்னத்த கிள்ளுனா அவ மூஞ்சி செவந்து போச்சு..

சமையல் ஆச்சு.. சாப்பிடப்போகையில பக்கத்துவீட்டு பங்கஜம் அக்கா கொஞ்சம் மொளகாப்பொடி குடேன் தீந்துபோச்சு வாங்கி வைச்சிருக்கேன் காயப்போட்டு அரைக்கனும்ன்னு வந்தா..

போனதடவ வாங்குனதே குடுக்கலன்னு நெனப்பு வந்தாலும் இதென்ன சிவபூசையில கரடி நொளஞ்சமாதிரின்னு சீக்கிரமா குடுத்து அனுப்பும்போது...ஒ மாமா இன்னிக்கி வேலைக்கிப்போகலயான்னு சீண்டுனா... இல்ல தலவலின்னு சமாளிச்சான்... அவளை வெளியதள்ளி கதவச்சாத்திட்டு சாப்புட தட்டுக்களைஎடுத்துவைச்சா...அதுக்குள்ள திரும்ப ஆரோ கதவைத்தட்டுனாங்க பங்கஜம் உள்ள அக்கா இருக்கு தட்டுங்கன்னு சொல்ற சத்தமும்கேட்டுச்சு.. இவ கதவத்தொறந்தா இவ பொறந்த ஊருல இருந்து பெரியப்பா மகன் வந்துநின்னான்

வாங்க அண்ணேன்னு உள்ளாற கூப்புட்டா அவன் உள்ளாற வந்து மாமாஇல்லயான்னு விசாரிச்சான்... இவ தண்ணி அவனுக்குக் குடுத்தா...அதுக்குள்ள பாத்ரூமில இருந்து இவன் வந்து வாங்க மாப்பிள்ளன்னு விசாரிச்சான்.. மாமா பிள்ளகளுக்குக் காது குத்து வைச்சிருக்கேன் அவசியம் குடும்பத்தோட வரணும்ன்னு மஞ்சபையில இருந்து வெத்தலபாக்கு எடுத்து தட்டுல வைச்சிக்குடுத்தான்...

இவ அண்ணேன் வாரதவுக வந்திருக்கீங்க சாப்புட்டுத்தேன் போகனும்கைகழுவிட்டு வாங்கன்னு சொன்னா.... அவனும் தங்கச்சிவீட்டுல சாப்புடாமலான்னு கைகழுவிட்டு ஒக்காந்தான்...

இவனுக்கு எரிச்சலாக வந்துச்சு காரியத்தக் கெடுத்துப்புடுவான் போலருக்கேன்னு யோசிச்சான் அண்ணனும்தங்கச்சியும் பேசிக்கிட்டு இருங்க நான் அரைநாள் வேலைக்கிக்கௌம்புறேன்னு கௌம்புனான்... அவளும் சோகத்தோட சரிங்க கௌம்புங்கன்னா... அவன் இருங்க மாமாநானும் வாறேன் பஸ்டாண்டுல விட்டுருங்கன்னு கௌம்புனான்...

அவனை பஸ் ஏத்திவிட்டுட்டு திரும்ப வீட்டுக்கு வந்தான்... டூட்டி கேன்சல் லீவு மத்தியானமும்ன்னு சந்தோசமா அவன் அவகிட்ட சொன்னான்.... அதுக்கு அவ சொன்னா நம்ம போதாத நேரம் நான் வெளியாளுன்னு சோகத்தோட சொன்னா... அவனுக்கு சோகமாயிடுச்சு

சரி நான் வேலைக்கிக்கெளம்புறேன்னு சொல்லிக் கெளம்புனான்.... அவ சோகத்தோட சிரிச்சா....

இதுமாதிரி பல நாடகங்கள் அந்த வீட்டுல.. அதுக்குள்ள அவங்களோட சுகதுக்கம் எல்லாம் நடந்துச்சு.. ரெண்டுபேரும் அந்த வீட்டுக்குக்குகெள ம்பிப்போனாங்க...

அங்கபோனா வீடு இடிஞ்சி கெடந்தது. குட்டிச்சுவராக. ''வாஇவங்க உள்ளாறபோய்ப்பாத்துட்டு வரலாம்'' நு மனைவியைக் கூப்புட்டுக்கிட்டு உள்ள போனதும் பழைய நெனப்பு வந்துருச்சு...

அப்ப சிலவருடங்களுக்கு முன் நடந்த கொடூரசம்பவங்கள் நினைவுக்கு வர குலுங்கி அழுதான் அவளும் அழுதாள்.

அந்தக்கலவர்த்துக்குபின் நாடோடியாய் அலைந்து பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் அடைந்து இப்போதுதான் திரும்பி வந்திருக்கிறார்கள்

அவ ஆசையா அடுப்படி யப் பாத்தா...இவன் வீட்ட சுத்திவந்தான் அவசொன்னா இங்கதான் நாம வாழ்ந்தோம் தூங்குணோம் புள்ளபெத்துக்கிட்டோம் நம்ம பிள்ளைங்க பொழங்குன எடமிதுங்க... இவங்க மஞ்சள் பூசி பொட்டுவைச்சசாமிமாடம் இருந்துச்சு அங்க விழுந்து கும்புட்டாங்க

அவன் அவள் கைப்பிடித்து அழுத்தியபடி சொன்னான், நாம இங்கதான் வாழ்க்கையத் தொடங்கு னோம் னு.அவ குனிஞ்சி தரையில சொவத்துக்கு முத்தம் கொடுத்தா... இந்தவீடு எல்லாத்தையும்பாத்துக்கிட்டு இருந்துச்சு... எல்லாம் ஒருநாள் மண்ணாப் போச்சு. அம்மா அப்பா வோட சாவு இங்கதான் கலவர்த்தில் கொல்லப்பட்ட அவங்களை இங்கதான் சாத்திவைச்சிருந்தது கடைசியா பாத்துட்டு உயிர்பிழைக்க ஓடினதும் நுசொல்லும் போது ரெண்டுபேருக்கும் கண்ணீர் முட்டிச்சி வழிஞ்சிச்சி....

ஆமா அங்க இவங்களோட நெனப்புக சந்தோசங்க துக்கம் எல்லாத்துக்கும்சாட்சியா இருந்த வீடு மண்ணோடு மண்ணாச்சு...அதைப்பாத்துட்டு ரெண்டுபேர்கண்ணும் கலங்குச்சு கண்ணீர்வழிய ஒருபிடி மண்ணெடுத்துட்டு கெளம்பினாங்க... அதை ப்ரான்ஸ் வீட்டுல கொண்டுபோய் சாமி அறைக்கிட்ட வைச்சாங்க அவங்க குடும்பத்துல அந்த வீடும் ஒரு ஆளானமாதிரி இருந்துச்சு.....


அதை விழுந்து கும்புடும்பாது அவங்க முன்னோர்களை தாத்தன் பூட்டன் அப்பத்தா அதுக்கும் முன்னாடி இருந்தவங்க எல்லாரையும் வீட்டுக்குக்கூட்டியாந்த சந்தோசம் வந்துச்சு....அப்ப ஏம் மக்கான்னு அம்மா கூப்புடுறமாதிரி கேட்டுச்சு

இவங்கரெண்டுபேர் கண்ணுலயும் கண்ணீர் வழிஞ்சிச்சி....

பா.சிவகுமார்

# மௌனத்தின் மறுபக்கம்

மாணிக்கமோ
நஞ்சோ
வார்த்தைகளை
வெளியே உமிழாமல்
அதரம் தாண்டாது
தொண்டையிலே
அழுத்திப்
பிடித்திருத்திருக்கும்
மௌன அரவத்தின்
வீச்செல்லை முடிவிலி
வார்த்தைப் பிரசவத்தை
தள்ளிப் போடும்
மௌனங்கள் என்றும்
வலிமிகும் இடங்கள்
மனக்குகையெங்கும்
எதிரொலிக்கும்
மௌனசப்தத்தின்
டெசிபலளவு
மீயொலி
அழுத்த மௌனங்கள்
சுற்றியுள்ளோரை
மௌனமாக
இருக்க விடுவதில்லை
உறங்கும் எரிமலை
அலைமோதும் பாறை
ஆழ்கடலமைதி
சிறகடிக்கும் புள்ளினங்கால்
ஆர்ப்பரிக்கும் அரிமா
தன்னிரக்க கேவலென
எதுவும் இருக்கலாம்
மௌனத்தின் மறுபக்கத்தில்
மௌனத்தின் மறுபக்கம்
மௌனமாக என்றுமே
இருந்ததில்லை.



# எங்கே அவன்?

சங்கர சுப்பிரமணியன் (மெல்பேர்ன்)

**கா**ல்ஃபீல்ட் தொடர்வண்டி நிலையத்தில் நின்றிருந்த தொடர்வண்டி சிறிது நேரம் நேரம் கடந்தும் கிளம்பவில்லை. அனிச்சையாக வாசித்துக் கொண்டிருந்ததை நிறுத்தி தலையைத்தூக்கி என்ன நடக்கிறது எனப்பார்த்தேன். என்னைப்போன்றே வாசிப்பில் ஈடுபட்டிருந்த அனைவரது தலைகளும் நிமிர்ந்தன. வாசிப்பு என்பது மனிதனுக்கு எவ்வளவு அவசியம் என்பது எல்லோருக்கும் புரிந்த ஒன்றே.

ஆனால் இவ்வாசிப்பு பொது அறிவைப் பெருக்கிக்கொள்ளவா? நம்மைச்சுற்றி என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ளவா? அல்லது பொழுதைப்போக்கவா? என்ற நிலையில் நிறுத்தி எண்ணிப்பார்த்தால் உண்மையில் யார் யாருக்கு எது வாசிப்பு

என்பது புரிந்து விடும். ஆகையால் வாசிப்புக்கு வலிய நாமே ஒரு பொருளை எண்ணிக்கொண்டு அதையே மற்றவர்களும் எண்ணாவிட்டால் அவர்களுக்கு வாசிப்பில் ஈர்ப்பு இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது.

தொடர்வண்டி கிளம்பாததற்குண்டான காரணத்தை அறிவிப்பின் மூலம் உணர்ந்ததும் எல்லோரும் திரும்பவும் கைபேசியுடன் ஐக்கியமாயினர். இவர்கள் அனைவரும் வாசித்துக் கொண்டிருக்கிறார்களா

என்பதை உறுதியாகவும் கூறமுடியாது. சிலர் பாட்டு கேட்கலாம். சிலர் படம் பார்க்கலாம். சிலர் செய்தி வாசிக்கலாம். சிலர் பொழுது போக்குக்காகவும் வாசிக்கலாம். சிலர் அறிவைப்பெருக்கும் விதமானவற்றில் ஈடுபட்டிருக்கலாம்.

சட்டென்று என் மனக்குதிரை இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் சென்றது. அப்போதெல்லாம் காலையிலும் மாலையிலும் பணிக்காக சிட்டிக்கு செல்பவர்கள் இரண்டு மூன்று மணி பயணநேரத்தை கையிலிருக்கும் நூலுடன் செலவிடுவார்கள். எப்படியும் ஒரு வாரத்துக்கு ஒரு நூலை முடித்துவிடுவார்கள். இன்று இரண்டு வாரத்துக்குள்ளாவது ஒரு நூலை முடிப்பார்களா? இப்படி பலவாறாக எண்ணவும் நான் இறங்க வேண்டிய சதர்ன் கிராஸ் நிலையம் வரவும் சரியாக இருந்தது.

தொடர்வண்டியிலிருந்து இறங்கி அடுத்த தடத்தில் சன்பரி செல்லும் தொடர்வண்டிக்காக காத்திருந்தபோதுதான் நான் அதிசயிக்கும்படியான ஒன்று நடந்தது. என் தடத்தைநோக்கி எஸ்கலேட்டரில் இருந்து ஒருவர் இறங்கி வந்தார். என்னருகே வந்து நின்றார்.

"சன்சைன் செல்லும் தொடர்வண்டி இந்த தடத்தில் வருமா?" என்னருகே நின்றவர் கேட்டார்.

"வரும். இன்னும் சில நிமிடங்களில் சன்பரி செல்லும் தொடர்வண்டி வரும். அது சன்சைனில் நிற்கும். நானும் அங்குதான் இறங்குவேன்." என்றேன்.

"ரொம்ப நன்றிங்க" என்று சொன்னவரின்

முகத்தில் எந்தவித கவலையின் சாயலும் தென்படவில்லை.

நன்றி சொன்னவரின் முகத்தில் கவலையின் சாயல் தெரியவில்லை என்றதும் குழப்பமாக இருக்கிறதல்லவா? என்னருகே நின்றவருக்கு இரண்டு கால்களும் இல்லை செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால் அவர் செயற்கைக்காலுடன் இருப்பதாகவே காட்டிக் கொள்ளவில்லை. டீசர்ட்டும் பர்முடாஸும் அணிந்திருந்தார்.

அவருக்கு முழங்கைக்கு கீழ் இரண்டு கைகளும் இல்லை. விபத்தால் அப்படியானதா அல்லது பிறவியிலேயே அப்படியா என்று தெரியவில்லை. ஏனென்றால் இரண்டு கைகளும் ஒரே மாதிரி இருந்தது. இரண்டு கைகளிலும் முழங்கைக்கு கீழே முடிவில் ஒரு நெல்லிக்காய் வடிவில் உருண்டையாக இருந்தது.

சன்பரி தொடர்வண்டி தடத்தில் தொடர்வண்டி வந்து நின்றது. அவரிடம் சொன்னதும் ஒன்றுமே அலட்டிக் கொள்ளாமல் என்னுடன் இயல்பாகவே வண்டியில் ஏறி இருக்கையில் அமர்ந்தார். தொடர்வண்டி ஓட ஆரம்பிக்கவும் அவர் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க நான் அவரைப்பற்றியே எண்ணிக்கொண்டுருந்தேன்.

நமக்கெல்லாம் கைகால்கள் எல்லாம் நன்றாக இருந்தும் எவ்வளவோ பிரச்சனைகள். அவற்றையெல்லாம் சமாளித்து வருகிறோம். ஆனால் இவருக்கும் வாழ்க்கையில் பிரச்சனைகள் இல்லாதிருக்காது. அந்த பிரச்சனைகளோடு கைகால்களும் இல்லாதது பெரிய பிரச்சனையாகவே இருக்கும். அதுவும் அன்றாட அவரின் தேவைகளை செய்யவே எவ்வளவு அல்லல்பட வேண்டியிருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

தொடர்வண்டி டாட்டினம் நிலையத்தில் வந்து நின்றது.

"அடுத்த தொடர்வண்டி நிலையம் சன்சைன்.


அங்குதான் இறங்கவேண்டும்"

"அப்படியா, நன்றி" என்று அவர் சொல்லவும் அடுத்த நிறுத்தம் சன்சைன் என்று அறிவிப்பும் வந்தது.

சிறிது நேரத்தில் சன்சைன் தொடர்வண்டி நிலையத்தில் வண்டி நிற்கவும் உற்சாகமாக எழுந்து வண்டியிலிருந்து இறங்கினார். நானும் அவரைத் தொடர்ந்தேன். மேல்தளத்தில் வெளியேற வேண்டிய இடம் இருந்ததால் லிப்டில் நுழைந்தோம். அவரே லிப்ட் மேலே செல்வதற்காக உள்ள குறியை தனது முழங்கை முடிவிலிருந்த உருண்டையான பகுதியினால் அழுத்தினார். லிப்ட் மேலே சென்று நின்றது.

லிப்டில் இருந்து வெளிவந்ததும் அவர் தன் முழங்கையின் அடிப்பகுதியால் பர்முடாஸில் இருந்த பாக்கெட்டின் அடியில் மேல்நோக்கி ஒரு தட்டு தட்டினார். பாக்கெட்டிலிருந்த கைபேசி மேமே எழும்பிக் குதிக்க மறு முழங்கையால் கீழேவிழாதபடி சரியாகப்பிடித்தார். அந்த போனுடன் இருந்த மைகீ கார்டை ஸ்கேனரில் காட்டி வெளியேறியவர் கீழ் தளத்துக்கு செல்ல திரும்பவும் கீழிறங்க லிப்டுக்கு சென்றார். நானும் உடன் சென்றேன். கீழிறங்கியதும் நன்றி சொல்லிவிட்டு விடைபெற்றார்.

அவர் சென்றதும் எனக்கு மனதுக்குள் வலித்தது. என்னையும் அறியாமல் என் கண்கண்கள் கலங்குவதை உணர்ந்தேன். என்னால் கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் உதிர்வதை கட்டுப்படுத்த முடியவில்லை. இறைவன் இருக்கிறான் என்கிறார்களே? அவன் எங்கே இருக்கிறான்? இங்கே சிலரைக்கேட்டால் போனபிறவியில் செய்த பாவம் என்பார்கள். அவனோ அந்த இறைவனையே மன்னித்தவனாக இயல்பாக நடந்ததை கடந்து செல்கிறான். தூரத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும் அவன் என் கண்முன் இறைவனாக சென்று கொண்டிருக்கிறான்.




# நூலின் பெயர் – அகமேந்தி (குறுங்கவிதைகள்)

Dr ஜலீலா முஸம்மில் ஏறாவூர்

'காட்டுவாசி ஒருவன் கொட்டிய பாறையில் கவிதை தோன்றியிருக்க வேண்டும்' என்பார் எமர்சன். 'கவிதை மந்திர மொழிகளிலும் சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப்பாடல்களாகத் தோற்றம் பெற்றிருக்க வேண்டும்' என்கிறது வாழ்வியல் களஞ்சியம்.கவிதை என்பது உணர்ச்சிளைப் பிழிந்து தமிழோடு பிசைந்து செய்யப்பட்ட ஓர் இன்பக்கவளம் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. உணர்ச்சி, கற்பனை, வாழ்வியல் கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது.தமிழ் மொழியின் செழுமையையும் அழகையும் சிறந்த இலக்கண நடை கொண்ட தமிழ் மரபுக்கவிதைகளில் நாம் காணலாம். ஆனால் அவ்வாறான வரையறையற்ற புதுக்கவிதை வடிவங்களில் கவிதையின் இனிமையையும் எளிமையையும் உணர்ச்சி ததும்பும் வெளிப்படையையும் நாம் காணக்கூடியதாக இருப்பது அதன் சிறப்பம்சமாகும். எம் தாய்மொழியாம் தமிழை வளர்க்கும் அனைத்துக் கவிஞர்களும், அனைத்து இலக்கியவான்களும் நிச்சயம் போற்றப்பட வேண்டியவர்களே.

அகமேந்தி குறுங்கவிதைகள் நூலானது சென்னை, உலகத் தமிழன் பதிப்பகம் வெளியீட்டில் பிரசவமாகியிருக்கிறது. மு.முருகேஷ் (முதுநிலை உதவி ஆசிரியர்,இந்து தமிழ் திசை நாளிதழ்) அவர்களின் அருமையான முன்னுரையோடு, கவிஞர் பாண்டிச்சேரி கருப்பசாமி அவர்களின் அன்பான அணிந்துரையோடு இன்னும் பல இலக்கிய மேதைகளின் வாழ்த்துரைகளோடு அழகிய குறுங்கவிதைகள் தாங்கி மலர்ந்து நிற்கிறது அகமேந்தி.

குறுங்கவிதைகளால் உங்கள் அகங்களை ஏந்திக் கொள்கிறது என்றால் அது மிகை இல்லை.

இயற்கையை, பறவைகளை, வானத்தை, சிற்றுயிர்களை மற்றும் மகிழ்ச்சி, காதல், நட்பு, வலி, துரோகம்,உறவு, பிரிவு போன்ற பல்வேறு வாழ்வியலின் கூறுகளையும் பாடுபொருளாகக் கொண்டு தன் சின்னஞ்சிறிய கவிதைகளால் அனைவரையும் கவர்ந்து விடுகிறார் கவிஞர். சிறிய கவிதைகளால் பாரிய உண்மைகளை, பாரிய கருத்துக்களை நமக்கு உணர்த்துகிறார்.மெல்லிய உணர்வுகளின் கலவையாக அகமேந்தி உங்கள் அகங்களை நனைப்பதை நீங்கள் நூலை வாசிக்கும்போது உணரக்கூடியதாக இருக்கும். யாம் பெற்ற இன்பம் பருக உங்களையும் அன்புடன் அழைக்கிறேன்.

நூலாசிரியர் கவிஞர் ச.இராஜ்குமார் அவர்களின் கவிதைகளில் கருணையும் இரக்கமும் ஏக்கமும் குழந்தைத்தனமுமே அதிகமாக காணப்படுகின்றன. ஹைக்கூ கவிதைகள் எழுதுவதிலும் கவிஞர் திறமை வாய்ந்தவர் என்பதை இவ்விடத்தில் கூற விளைகிறேன். அகமேந்தியில் ஹைக்கூ கவிதைகள் பல துளிர்த்து வேர்விட்டிருப்பது நூலுக்கு சுவை சேர்க்கும் ஒரு அம்சமாகும்.

"பறத்தலுக்கு வானம் கைவசத்தில் இருக்கு
திரும்பி வந்தால்
கூடு கட்டத்தான்
மரங்களில்லை பறவைகளுக்கு!"

இது கவிஞரின் முதலாவது கவிதை.முதல் கவிதையிலேயே பறவைகளுக்காக பரிதவிக்கிறார் கவிஞர். எத்தனையோ உள்ளர்த்தங்களை கவிதை மூலம் உணர்த்தி விடுவது அவரது கவிதைகளின் சொற்சேர்க்கைகளின் சிறப்பு என்றே கூறலாம்.மனிதனின் செயற்பாடுகள் காரணமாக, நகரமயமாக்கல் காரணமாக மரங்கள் அருகி வருவதைக் கண்டு அழும் கவிஞர் அதேநேரம் உலக மனிதர்களிடம் மரங்களைப் போன்று வானத்தையும் உங்களால் சூறையாட முடியுமா? என்ற வினாவையும் தொடுத்துச் செல்கிறார்.

பூமியில் இருக்கும் நாம் தான் வானில் இருக்கும் நட்சத்திரத்தை பார்க்கிறோம். பூமியில் இருக்கும் நாம் தான் வானில் பறக்கும் பறவைகளைப் பார்க்கிறோம் ஆனால் கவிஞர் சொல்ல வருவதைப் பாருங்கள்.

"நிலவின் பார்வையில்
ஓராயிரம் நட்சத்திரங்கள் பூமியில் மின் விளக்குகள்"

ஆஹா... என்ன ஒரு கற்பனை.

பூமியின் நட்சத்திரங்களை நிலவு பார்த்துக் கொண்டிருக்கிறதாம்!

நட்சத்திரக் கண்கள் பூமியின் அழகியலைக் கண் சிமிட்டாது பார்த்துக் கொண்டிருக்குமோ?

'யாரோ ஒருவரிடம்
நம்மைத் தேடுவதில் ஆரம்பமாகிறது
நிம்மதியின்மை'

வாழ்வின் தத்துவங்களையும் எதார்த்தங்களையும் நான்கு வரிக்குள் உள்ளடக்குவதில் கவிஞர் வல்லவர் என்று நினைக்கிறேன். காலங்காலமாக மனிதவாழ்க்கை என்பது எதிர்பார்ப்பிலேயே கழிந்து விடுகிறது. எல்லா உறவுகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து அன்பை, காதலை,கருணையை, தேவையை ஆளுக்காள் எதிர்பார்த்த வண்ணமே வாழ்கின்றன.மனித மனம் என்பது எத்தனையோ கரங்கள் ஆதரித்தாலும் அன்பெனும் ஒரே ஒரு சுட்டு விரலுக்கே அடிபணியக்கூடியது. அவ்வாறான அன்பைத் தவறான நபரிடம் நாம் தேடும்போது அந்தப் புள்ளியில் இருந்து ஆரம்பமாகிறது நிம்மதியின்மை என்பதை இக்குறுங்கவிதை உணர்த்திச்செல்வதைக் காணலாம்.

"விடைபெற்றபின்
குடையொன்றைத்
தந்து செல்கிறாய்
முழுதாய் நனைந்து கொண்டிருக்கிறேன்
கண்ணீரில்"

உறவு என்றால் பிரிவு இருக்கும்

காதல் என்றால் கண்ணீர் இருக்கும். இதயங்கள் இரண்டும் இணைந்த பின் இடைவெளிகள் இல்லை. இந்தக்கவிதையில் ஆத்மார்த்தமான காதலைக் கவிஞர் வெளிப்படுத்தும் விதம் ஆச்சரியத்தை நமக்குள் விசிறிச் செல்வதைப் பார்க்க முடிகிறது. முழுதும் கண்ணீரால் நனைந்த பிறகு பிரிவின் பொழுதில் பரிசாகத் தந்த குடை அவனுக்கு உதவவே இல்லை என்பதை நாசுக்காக சொல்வது மிகவும் அழகாக இருக்கிறது.

இளமையிலோ முதுமையிலோ வாழ்வின் எல்லாக் கணங்களிலும் யாருமே தமது உள்ளங்களில் தங்கிய அன்பின் அழகிய நினைவுகளை உதிர்த்து மறந்து விடுவதில்லை.அது எப்போதும் உயிர்த்திருக்கும் ஜீவிதமுடையது. வாழ்வின் எந்த ஒரு கட்டத்திலும் எந்த

ஓர் இடத்திலும் இடங்களைக் கடந்து செல்லும்போதும் தனிமையிலும் கூட்டத்திலும் பயணத்திலும் அழகிய நினைவுகள் மனதில் ஊசலாடிக் கொண்டே இருக்கும்.

அதுவும் ஒரு அமைதியான பொழுது அமைந்துவிட்டால் ஆழ்மனதின் ஓரங்களில் படிந்த அழகிய நேச நினைவுகள் துளிர்விட்டுக் கிளை விட்டு விருட்சமாகி விடும்தானே?

இந்தக்கவிதையைப் படிக்கும்போது கடைசி வரியில்

கனமான ஒரு உட்பொருளை கவிஞர் சொல்வது சிறப்பாக அமைந்திருக்கிறது.

*அமைதி ஒரு முழு நீள சுகம்...*

*அமைதி ஓர் உன்னதமான உண்மையான உணர்வு...*

*அமைதி ஒரு சொர்க்கம்...*

*அமைதியை தூரத்தில் துளைப் போட்டு இசைத்துக் கொண்டிருக்கும் வண்டுகளின் ராகம்...*

*அமைதி நம் முழு மனதின் சாந்தம்...*

*அமைதி யார் யார் மீதோ வைத்திருக்கும் நினைவுகள்..!!!*

இப்படி மெல்லிய உணர்வுகளால் மிருதுவாகத் தாலாட்டும், மனதை லயிக்கச் செய்யும் கவிதைகள் இந்த நூலில் ஏராளம் காணப்படுகின்றன.

*“கோடிக்கால்களில்*

*நடக்கும்*

*மழைக்கும்*

*நொடிப்பொழுது கூட நிலைப்பதில்லை சுவடுகள்...!”*

அழகியலோடு சேர்ந்து வாழ்வின் நிலையாமையை எடுத்து இயம்பும் சில்லிடும் இயற்கையின் கவிதையை நீங்களும் ரசித்துப் பாருங்களேன். இந்த ருசியான கலவையில் ஒரு ஜென் தத்துவத்தைக் கவிஞர் உங்களுக்காக விட்டுச் செல்கிறார்.

இப்படி கவிஞரின் ஒவ்வொரு கவிதைக்குள்ளும் சுவை மிகுந்த, வலி மிக்க, தத்துவங்கள் கூறுகின்ற, நேசத்தைப் பாடுகின்ற, காதலைத் தரிசிக்கின்ற, துரோகத்தை விளாசுகின்ற அனேக கவிதைகள் அடங்கி இருக்கின்றன.அருமையான கருத்துக்கள் தாங்கிய குறும்பாக்களை ஒன்றாக்கி ஒரு கதம்பமாக உங்கள் முன் நீட்டியிருக்கிறார்.

நான் ரசித்த மேலும் சில கவிதைகள்...

*“கவிதை ஒன்று கரை ஒதுங்கியது*

*அவள் கண்களின் ஓரம் கண்ணீர்த் துளியாய்...!”*

காதலியின் கண்ணீர்த் துளியைக்கூட விட்டு வைக்கவில்லை கவிஞர்.

அதைக் கவிதையாக்கிய விதம் வியப்பாக இருக்கிறது அல்லவா?

*“மற்றவர்களின் உணர்வுகளையும்*

*உணர்ச்சிகளையும்*

*புரிந்து கொள்ள முடியாத*

*நான்*

*ஒரு மிருகம் என்று*

*நீங்கள் நினைத்தால்*

*என்னுடைய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ள முடியாத நீங்கள் யார்?”*

*நிறைகளை விட்டுவிட்டு*

குறை கூறித்தெரியும் அனைவருக்கும் மேற்கண்ட கவிதை கனமான சாட்டையடி. நல்லதோர் கேள்வி... அனைவருக்கும் புத்திமதி செல்லக்கூடிய கவிதை சிறப்பு.

*“தேவதைகளைத்*

*தேடத்தேவையில்லை.. மகள்களைப் பெற்றாலே போதும்...!”*

ஆஹா...அற்புதமான கவிதை.பெண் பிள்ளைகள்

மண்ணுலகின் தேவதைகள். அவர்களைப் பெற்றாலே போதும் நீ தேவதைகளை தேடித்திரியத் தேவையில்லை. நீ நலவுகளை தேடியலையத் தேவையில்லை. அவளே எல்லாமாக உனக்கு இருப்பாள்.நான் வியந்த கவிதைகளில் இதுவும் ஒன்று.

அழகும் எளிமையும் ததும்பி வழியும் வகையில் கவிதை நூலை ரசித்து ரசித்து செதுக்கியிருக்கிறார் கவிஞர் ச.இராஜ்குமார்.இதயத்திற்கு இனிமையும் தமிழுக்கு அழகும் சேர்த்து வாசகர் நெஞ்செமெனும் ஆசனத்தில் வசதியாக உட்கார்ந்து விடுகிறது இக்கவிதை நூல்...

அகமேந்தி இருந்த

“அகமேந்தி”யைத் தமிழ் கூறும் நல்லுலகுக்கு அச்சில் வார்த்துப் பரிசளித்த கவிஞரை மனமுவந்து வாழ்த்துவதோடு இன்னும் அவர் பல நூல் பிரசவங்களை எதிர்காலத்தில் நமக்குத் தர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

*நூலின் பெயர்- அகமேந்தி (குறுங்கவிதைகள்)*

*நூலாசிரியர்- ச. இராஜ்குமார்*

*நூல் வெளியீடு-உலகத் தமிழன் பதிப்பகம், சென்னை 11.*

*பக்கங்கள் 104*

*விலை ₹150*



ந.மயூரரூபன்

# பச்சை வார்த்தைகளும் வண்ணத்துப் பூச்சிகளும்

*மகரந்தத்துள் மூழ்கும்
சந்திப்பொன்றில் எறிந்தேனென்னை.
அசையும் காலத்தைப் புசித்தபின்
அசையாக் காலத்துள்
காய்ந்து முளை செத்த வெட்டையின்
ஒவ்வொரு மூலைகளிலும் தொங்குகிறேன்.
என்னைப் பொறுக்கித்
தன்னைப் புனையும் வார்த்தைகள்
என்னைச் சுற்றிப் பறக்கின்றன.
பச்சையிலைகளாய் நிறைய
இறகு முளைக்கும் புழுக்கள்
பச்சை வார்த்தைகளைத் தின்னுகின்றன.
எஞ்சிய காலத்தின் ஓட்டைகளில்
தொங்கும் என் மீது
வண்ணத்துப் பூச்சிகள் மொய்க்கின்றன.
சூடு முளைக்குமிந்த வெட்டையில்
பறத்தல் மறந்து
வண்ணச் சிறகுகள் விழுகின்றன.*

*நன்றி: முகநூல்*

துவாகரன்

# மறைந்திருக்கும் பறவைகள்

*வரிசை குலையாத அழகு.
காற்றோடு கலந்த சுகந்தம்.
புத்துயிர்ப்புடன் ஈர்த்திடும் சோலை.
பந்தற்கால் அருகே
நிறுத்திவைத்த துவிச்சக்கரவண்டி.
சற்றுக் கண்ணயர்ந்த நேரம்தான்!
எந்தப் பறவையென்று தெரியவில்லை.
கைப்பிடி, இருக்கை, கைப்பை
அத்தனையும் கழித்துவிட்டுச் சென்றிருக்கிறது.
மிக இரகசியமாக,
அழுக்கைத் தெளிப்பதற்காகவே
காத்திருக்கின்றன
பறவைகளும்.
மனிதர்கள்போலவே!*

*நன்றி: முகநூல்*

Donall Dempsey

# BIRTH STORIES

*Before we knew*
*anything at all about sex*
*we knew*
*all about our birth*
*stories.*
*Our Mam*
*would recall & regale us all*
*(setting the table…peeling spuds…sweeping out the hall)*
*with the intimate*
*details*
*of all*
*our births.*
*"Tell us of US again…Mam…tell of us again!"*
*I was small*
*(2lbs 2 ounces)*
*hardly anything*
*at all.*
*A mere scrap of*
*human being.*
*Blathin Ashling*
*was even smaller*
*(1 lb something or other)*
*…a little miracle.*
*Was it Deirdre*
*with the cord wrapped*
*around her neck*
*fighting both*
*Life & Death*
*'til she was blue*
*In the face*
*Or Grainne*
*with the cord so thin*
*she was born just in*
*the nick of time*
*& the cord(just a hair's*
*breath)*
*floats eternally now*
*(in a glass of formaldehyde still)*
*for doctors to astonish*
*& marvel at.*
*And how*
*there being no incubators*
*when I came into being*
*they had to wrap*
*me up*
*in cotton wool*
*(as if I were a*
*precious thing)*
*in order to keep*
*me warm*
*but I wasn't having*
*any of it*
*kicking my way*
*out of the stuff*
*only for them*
*to repackage*
*me again!*
*And again…& again.*
*And here(in 1956)*
*I arrive on the scene*
*tip toeing out into*
*Life*
*with cool coal black*
*full length sideburns*
*ready to rock*
*& roll man*
*as the labour ward radio*
*played*
*the hit*
*of the day*
*"CE SERA…SERA!"*
*It's almost as if*
*I can still hear*
*Doris singing*
*our whatevers*
*will bes.*
*Our birth*
*story*
*each our*
*first fairy story*
*&*
*we*
*the Princes & Princesses*
*of it*
*all.*


ஐரிஷ் கவிஞர் :டொனால்_டெம்ப்ஸே

தமிழில்: ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா: நொய்டா



# பிறப்பின் கதைகள்:

*நாங்கள் உடலுறவைப் பற்றி
ஏதேனும் அறியும் முன்னரே
எங்களுடைய பிறப்பு பற்றிய
எல்லாக் கதைகளையும்
நாங்கள் அறிந்திருந்தோம்.
எங்களுடைய அம்மா
சாப்பாட்டு மேஜையை
ஒழுங்கு படுத்திக்கொண்டே,
உருளைக்கிழங்கு உரித்துக்கொண்டே,
கூடத்தைப் பெருக்கிக்கொண்டே
எங்கள் பிறப்பின்
அந்தரங்க விஷயங்களை
நினைவுபடுத்திக்கொண்டு
எங்களை மகிழ்விப்பாள்.
எங்களைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்க அம்மா!
எங்களைப் பற்றி திரும்பவும் சொல்லுங்க!"
நான் பொடியன் - இரண்டு பவுண்டு இரண்டு
அவுன்ஸ்கள்தான்.
உண்மையில் ஒன்றுமே இல்லை.
மனிதனின் வெறும் ஒரு துணுக்கு.
ப்ளாதின் ஆஷ்லிங்
இன்னும் பொடிசாக இருந்தான்,
கிட்டத்தட்ட ஒரு பவுண்டோ என்னவோ.
ஒரு சின்ன அற்புதம்!
கழுத்தில் கொடி சுற்றிக்கொண்டிருந்தது
டெய்ர்ட்ரி தானே,
அவளுடைய முகம் நீலமாகும் வரையில்
வாழ்வு, சாவு இரண்டோடும்
சண்டை போட்டுக்கொண்டு
அல்லது க்ரெய்ன்னி,
ரொம்பவே மெல்லிய கொடியோடு
சரியாக சமயத்தில்
பிறந்துவிட்டாள் அவள்.
அதோடு, அந்தக் கொடி,
மயிரிழை அளவேயானது,
இன்னும் டாக்டர்கள் பார்த்து வியப்படைகிற
மாதிரி
எவ்வெப்போதைக்கும்
ஒரு குவளை ஃபார்மல்டீஹைட் திரவத்தில்
இப்போதும் மிதக்கிறது
அத்துடன்,
அங்கே இன்குபேட்டர்களே இல்லாததால்
எப்படி நான் வந்தடைந்த போது
என்னை இளஞ்சூட்டில் வைப்பதற்காக
ஒரு விலையுயர்ந்த பொருளைப்போல
என்னைப் பஞ்சில் சுற்றிவைக்க வேண்டியிருந்தது
அவர்களுக்கு.
ஆனால் நான் அது எதற்கும் தயாராக இல்லை.
அந்த சமாசாரத்திலிருந்து
உதைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன்
அவர்கள் என்னை மறுபடியும் பொட்டலம்
கட்டவேண்டி.
திரும்பத் திரும்ப.
இப்போது 1956இல்
நான் காட்சியில் வந்து சேர்கிறேன்,
கால்விரல் நுனியில் வாழ்க்கையின் மேல்,
கன்னங்கரிய எடுப்பான
முழுநீள கிருதாவுடன்
ராக் அண்ட் ரோல் செய்யத் தயாராக.
பிரசவ வார்டின் ரேடியோ
அக்காலத்திய ஹிட் பாடலான
"கே ஸெரா ஸெரா!"வைப் பாடியபோது.
அது கிட்டத்தட்ட இப்போதுகூட
எங்களுடைய "வாட் எவர் வில் பீ வில் பீ"
க்களை
டோரிஸ் பாடிக்கொண்டிப்பதை என்னால் கேட்க
முடிகிறது போல.
எங்களுடைய பிறப்பின் கதை,
எங்கள் ஒவ்வொருவரின்
முதல் தேவதைக் கதை
அது எல்லாவற்றிலும்
ராஜகுமாரர்களும் ராஜகுமாரிகளும்
நாங்களேதான்.*



**பாலைவன லாந்தர்**

Translated into English by Latha Ramakrishnan


**ஆங்கிலத்தில்:அநாமிகா ரிஷி**
**(லதா ராமகிருஷ்ணன்)**

*கதவுகளே*
*ஒன்று அனுமதியுங்கள்*
*அல்லது*
*புறக்கணியுங்கள்..*
*வாழ்ந்த கதவுகளின்*
*வாழத்தெரியாத*
*தாழ்ப்பாள்கள்..*
*திறக்க மனமற்ற கதவுகளின் முன்*
*தட்டுவதற்கு நாதியற்ற விரல்கள்*
*மண்டியிட்டு கிடக்கின்றன..*
*கதவுகள் கொதிக்கின்றன*
*தாழ்ப்பாள்கள் உருகுகின்றன..*
*தட்டுங்கள் அல்லது உடையுங்கள்*

*எப்படியாவது உள்ளே நுழைந்து*
*எப்படியாவது வெளியேறிவிடுங்கள்..*
*நாம் கதவுகளற்ற*
*ஊரில் குடியேறும்*
*அந்நாளில்*
*துருவேறிய சாவிகளின் சப்தங்களை*
*இரவுகளில் கேட்க இசையாக்குவோம்..*

*Hei you, Doors*
*Either allow us*
*Or discard us.....*
*Of the long-lived doors*
*the latches that know not*
*the art of living....*
*In front of the doors that don't have the heart*
*to open*
*Fingers hapless not being able to knock*
*remaining kneeling down*
*The doors boil*
*The bolt melt...*
*Knock at the door*
*Or break it*
*Somehow get inside and*
*somehow make your exit.*
*On that day when we*
*settle in the place sans doors*
*(let) the noises of the rusted keys*
*become music to be relished at night.*

*A POEM BY PALAIVANA LANTHAR*




# கடலிலே ஒரு மீன்

**இலங்கையர்கோன்**

"விழா அழிந்த களம்" என்று கலித்தொகை ஆசிரியர்களுள் ஒருவர் கூறியதாக எனக்கு ஞாபகம். அந்த இடமும் அன்று விழா அழிந்த களம் போலவேதான் கிடந்தது. அது ஒரு கோயில். வீதியிலே வாடிய மலர்கள், பெண்களின் கொண்டைகளிலும் அவை போந்து வாடிய மலர்கள்...

பெண்களின் முகங்கள் தாமரை மலர்கள்! ஆனால் தாமரை மலர்களும் இடத்தை விட்டு எடுத்துவிட்டால் வாடி வதங்கி விடுவனவே!

பலர் – அவர்களைப் பலசாலிகள் என்று சொல்லி விடலாம் போலும் – பகல் முழுவதும் வந்த இயந்திரப் படகுகளிலும், வள்ளங்களிலும், ஏன் கட்டுமரங்களிலும் தங்கள் வீடுகளுக்குச் சென்று விட்டார்கள்.

எஞ்சி நின்ற ஆண்கள் ஆண்மை இழந்து வாடி நின்றார்கள். பெண்கள் முகங்களிலே செந்தாமரையின் சிவப்பு எல்லாம் இழந்து, சோபை இழந்து வாடி நின்றார்கள்.

அது விழா அழிந்த களம்!

இவர்கள் அந்த ஏழு மைல் கடலைத் தாண்டுவதற்கு ஒரு படகு அல்லது ஒரு வள்ளம் அல்லது ஒரு கட்டுமரமாவது வருமா வரமாட்டாதா என ஏங்கி மனம் உடைந்து காத்துக் கிடந்தார்கள்.

அது விழாவின் அடுத்தநாள்.

அன்றே இரவு அங்குதானோ என்று நினைத்துப் பாய்கள் உள்ளவர்கள் பாய்களை விரித்துக்கொண்டு படுத்தார்கள். பாய்கள் இல்லாதவர்கள் தங்கள் சால்வைகளையும் முந்தானைகளையும் அந்த வெள்ளை மணலிலே விரித்துப் படுக்க ஆயத்தமானார்கள்.

இரவு பத்துமணியிருக்கும். திடீரென ஒரு படகு வந்தது. அத்தனை பேரும் ஒரே ஓட்டம். பாய்களை இழந்தவர்கள் பலர்; சால்வைகளை மறந்தவர்கள் சிலர். முந்தானைகளை மறந்தவர் களும்... ஆ! இவைகளை எல்லாம் நான் கணக்குப் பார்த்துக் கொண்டா இருந்தேன்! ஓடினார்கள்.... ஓடினார்கள்... துறை முகத்தை நோக்கி...

அந்த இயந்திரப்படகு ஓட்டிக்கு ஓர் எண்ணம் உதித்தது. கொஞ்சம் கள்ளுக் குடிக்கலாம் என்று அவன் படகைத் துறைமுகத்திலே கட்டிவிட்டுப் போய்விட்டான்; போயே விட்டான்.

இனி, அந்தப் பிரயாணச் சீட்டு விற்பவனின் ஆட்சி.

அவன் ஆட்சியே புரிந்தான்.

அந்தப் படகு கொண்டு போகக்கூடிய மக்களின் தொகை அறுபது. ஆனால், அந்தப் பிரயாணச் சீட்டு விற்பவனுக்குத் திருப்தியே வரவில்லை. அவன் தன்னளவிற்குப் பணம் தேட முனைந்தான். அல்லது தன் முதலாளிக்குப் பணம் தேடிக் கொடுக்க நினைத்தானோ நான் அறியேன்.

அந்தப் படகில் மனிதர்கள் நிறைந்துவிட்டார்கள். பெண்களும், ஆண்களும், குழந்தைகளுமாக ஒரே கும்பல். அந்தப் படகு கொள்ளக்கூடிய தொகைக்கு

மேல் வந்துவிட்டது.

அப்பொழுதுதான் அந்தப் படகு ஓட்டி கள்ளைக் குடித்து வயிற்றை நிரப்பிக்கொண்டு வந்தான். அவன் உள்ளம் வேதனைப்பட்டது, 'ஏன் இத்தனை மக்கள்? சில சமயம் இந்தப் படகு கடலில் ஓடும் சுறாமீன் அல்லது திமிங்கிலம்போலத் திடீரென்று தண்ணீருக்கு அடியில் ஆழ்ந்துவிடுமோ' என்று!

ஆனால், அந்தப் பிரயாணச் சீட்டு விற்பவனா விடுபவன்? அவனுக்குத் தன் முதலாளிக்குப் பயணம் தேடிக் கொடுக்க வேண்டுமென்று ஆசை.

அவன் மனிதர்களை மிருகங்களாக நினைத்தான்.

அவனுமொரு மிருகம்தானே!

அவனுக்கு வேண்டும் பணம்.

ஏற்றினான், ஏற்றினான், அந்தப் படகே ஆழ்ந்து போகும்படியாக ஏற்றினான்.

வெள்ளை வேஷ்டிகளும் தேசியச் சட்டைகளும் அணிந்த இரு ஆண்களும், அவர்களுடைய இரு கொழுத்த மனைவிமார் களும் வந்து, அந்த லாஞ்சிலே முன்னரே இடம் பிடித்துக் கொண்டார்கள். இருந்துவிட்டார்கள் – அசையாத சித்திரங்கள் போல, பேசாத பதுமைகள் போல, அந்தப் படகின் அடி வாங்கிலே.

அவர்களுக்குத் தாங்கள் பெரிய மனிதர்கள் என்று ஒரு எண்ணம் போலும். அவர்களுடைய மனைவிமாரோ சதைப் பிடிப்பு மிக்கவர்கள். தொடைகளுக்கு மேலிருந்து பட்டுச் சேலை களை அடிக்கடி இழுத்துத் தொடைகளை மூடிக்கொண்டனர்.

ஆம். சொல்ல மறந்துவிட்டேன். அவர்களில் ஒருவருடன் ஒரு பெண் குழந்தை வந்தாள். அவளுக்கு வயது பத்து இருக்கும். கண்ணுள் கருமணி என்று கதைகளிலே சொல்வார்கள்; அது போல அவருக்கு அவள், அந்த மகள்.

அதற்கிடையில் அந்தப் பிரயாணச் சீட்டு விற்பவனுக்குக் கோபம் வந்துவிட்டது. தான், தனக்கோ அல்லது தன் முதலாளிக்கோ சம்பாதிக்கக் கூடிய பணம் வீணாகப் போகிறதே என்று அவனுடைய கவலை.

அந்தப் படகிலே போகும் மக்களைப் பற்றி அவனுக்குக் கொஞ்சங்கூடக் கவலையில்லை. அவர்கள் இருந்தாலும் ஒன்று தான் இறந்தாலும் ஒன்றுதான் என்பது அவனுடைய எண்ணம்.

அவன் சிறிய மனிதன்... ற்றினான், ஏற்றினான் இன்னும் பல பேர்களை.

அறுபதுபேரைச் சுமக்க வேண்டிய அந்த இயந்திரப் படகு, அன்று நூற்றுநாற்பது பேர் வரையிலே சுமந்தது. களைத்துப்போன குழந்தைகள் படகின் வாங்குகளுக்கு இடையிற் படுத்து விட்டார்கள். இது அந்தப் படகோட்டிக்குப் பொறுக்க முடிய வில்லையோ என்னவோ, உடனே அந்தப் படகின் இயந்திரத்தை முடுக்க ஆரம்பித்து விட்டான். அவன் மீது எனக்குச் சிறிய அன்பு பிறந்தது. ஆனால் அந்தப் பிரயாணச் சீட்டு எழுதுபவனுக்குத் திருப்தி என்பதே இல்லை. மக்கள் வந்துகொண்டே இருந் தார்கள். இவனும் பணம் சேர்த்துக்கொண்டே இருந்தான்.

அந்தப் பிரயாணச்சீட்டு எழுதுபவன் எண்ணினான், 'இவ்வளவு மக்களையும் இந்தப் படகில் எப்படி அடைக்கலாம்' என்று! ஒரு ஏழைக்குச் செல்வம் வந்ததுபோல அவன் மனத் திலும் ஒரு எண்ணம் உதயமாயிற்று. கணவன் மனைவியை ஏன் தாங்கக்கூடாது என அவன் நினைத்தான். மறுகணம் கட்டளை! "பெண்சாதிமாரெல்லாரும் புரியமாரின் மடியிலை இருக்க வேணும். பெண்சாதி பாரங் கூட எண்டால் புரிசனை மடியிலை வைச்சிருக்க வேணும்!"

எனக்கு இவனை உதைக்க வேண்டும் என்றுதான் தோன்றியது. ஆனால் தைரியந்தான் இல்லை. நான் உடனை நினைத் தேன், 'இதனாற்றான் எங்கள் நாடு சீரழிந்து கிடக்கிறதோ' என்று.

'தாயும் தந்தையுமற்ற குழந்தைகள் போல நாங்கள் இதை நோக்கித்தானா சீரழிகின்றோம்' என்று என் மனதிலே பட்டது.

அவன் ஒரு அற்பன். நான் ஒரு பயந்தாங்கொள்ளி.

திடீரென்று அந்த வெள்ளை வேட்டி உடுத்த ஒருவனுடைய மகளின் கையைப் பிடித்து இந்த அற்பன் இழுத்தான். சொன் னான்: "ஏன் தங்கச்சி, கொப்புவின்ரை மடியிலை அல்லது கோச்சியின்ரை மடியிலை இரென். உனக்கும் ஒரு தனி இடம் வேணுமோ இஞ்சை?"

அந்தக் கணத்தில், அவ்வளவு காலமும் அமைதியாக இருந்த அந்த வெள்ளை வேட்டிக்காரன், ருத்திரமூர்த்தியானான். அறை விழுந்தது. பிரயாணச்சீட்டு விற்பவன் படகு வாங்குகளுக் கிடையிற் கிடந்து மண் கவ்வினான். வெள்ளை வேட்டிக் காரனுக்குச் சினம் தணியவில்லை.

அதை அறிந்து உடனே கள்ளு மண்டிய படகு ஓட்டி அப்படகின் இயந்திரத்தை முடுக்கிவிட்டான். அது "சக்கு சக்கு" என்று ஆரம்பித்தது.

வெளியே மழைத்தூறல்.

அந்த இரண்டு வெள்ளை வேட்டிக்காரர்களின் மனைவிமார் தங்கள் பட்டுச்சேலைகளை இழுத்துச் செருகிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

விழா அழிந்த களம்.

நன்றி : வெள்ளிப்பாதரசம்


# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்